# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : தேசிய வருமானம்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தேசிய வருமானம்

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். இந்தியாவில் நாட்டு வருமானத்தை கணக்கிடுவது மத்திய புள்ளியியல் அமைப்பு.

## மொத்த நாட்டு உற்பத்தி (GNP) Gross National Product

மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

**மொத்த நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டு முதலீட்டில் ஈட்டிய இலாபம் - உள்நாட்டில் வெளிநாட்டு முதலீடுகள் மூலம் ஈட்டிய இலாபம்.**

## மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) Gross Domestic Product

ஒரு ஆண்டில் நாட்டின் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பைக் குறிக்கும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி - வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்.**

## நிகர நாட்டு உற்பத்தி (NNP) Net National Product

மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானம் போன்ற சிலவற்றை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தமியாகும்.

**நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி - தேய்மானம்**

## நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) Net Domestic Product

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானம் போன்ற சிலவற்றை நீக்கிய பின் கிடைக்கும் பணமதிப்பு நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

**நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம்**

## தலா வருமானம் அல்லது தனி நபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP PER HEAD)

தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும். உண்மையான தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாக கருதப்படும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிலவற்றை சரிசெய்வதால் மூலம் இது பெறப்படுகிறது.

**தலா வருமானம் = <u>மொத்த உள்நாட்டு உற்பத்தி</u>**

**நாட்டின் மொத்த மக்கள் தொகை**

## நாட்டு வருமான கணக்கீடு முறைகள்

நாட்டு வருமானத்தை மூன்று வழிகளில் கணக்கிடலாம். அவையாவன

1. **உற்பத்தி முறை**
2. **வருமான முறை**
3. **செலவின முறை**

### ➢ உற்பத்தி முறை

ஓராண்டு காலத்தில் அனைத்து தொழில் நிறுவனங்களும் உற்பத்தி செய்த பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் கூட்டுத் தொகையே, மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.இருமுறை கணக்கிடுதல் இம்முறையில் உள்ள மிகப்பெரிய சிக்கலாகும்.

### ➢ வருமான முறை

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உற்பத்தி காரணிகள் பெறும் வருமானத்தை கூட்டுவதன் மூலமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

### ➢ செலவின முறை

நாட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளின் கூட்டுத் தொகையே மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக கணக்கிடப்படுகிறது.

## நாட்டு வருமானத்தை கணக்கிடுவதால் ஏற்படும் பிரச்சனைகள்

1. கருப்பு பணம்
2. வளரும் பணிகளின் துறை (Growing Service Sectors)
3. இல்லத்தரசிகளின் பணிகள்.
4. சமூக பணிகள்
5. சுற்று சூழல் மதிப்பு. (Environmental Cost)

## பணவீக்கம்

பொருளியல் அறிஞர் கிரௌத்தர் "பணத்தின் மதிப்பு குறைவதும் விலைகள் உயர்ந்து கொண்டு செல்வதுமான ஒரு நிலையை பணவீக்கம் என்று வரையறுத்துள்ளார்" பொதுவாக பணவீக்கம் காலத்தில் விலை மட்டம் உயரும். அதிகப்படியான பணம் மிகக் குறைந்த பண்டங்களைத் துரத்தும் நிலையை இது குறிப்பிடுகின்றது.

## பண வீக்கத்தின் வகைகள்:

1. **தேவை இழுப்பு பண வீக்கம்**:- கொடுக்கப்பட்ட விலையில் பண்டங்கள் பணிகளுக்கான தேவை, அவற்றின் அளிப்பைவிட உயர்ந்திருக்கும் நிலையில் பொது விலை மட்டம் உயரும் நிலையை பணவீக்கம் என்கிறோம்.

   **தவழும் பணவீக்கம்** :- இரண்டாம் உலகபோர் முடிவுக்கு வந்ததிலிருந்து விலையும் கூலியும் ஒன்றை ஒன்று மேல்நோக்கி உயர்த்தும் நிலையை தவழும் பணவீக்கம் என்று கூறுகிறோம்.

   **ஓடும் (அ) தாவும் (அ) மிகை வேகப் பணவீக்கம்:-** ஒவ்வொரு நாளும் விலைமட்டம் வரம்பின்றி உயர்ந்து கொண்டே செல்வதை மிகை வேகப் பணவீக்கம் என்று கூறலாம்.

2. **செலவு உந்து பணவீக்கம்**:

   **உற்பத்தி செலவு அதிகரிப்பு**:- செலவு உந்து பணவீக்கம், செலவு உயர்வதால் ஏற்படுவது, இத்துடன் கூலி உயர்வும் சேர்ந்து உற்பத்தி செலவு அதிகரிப்பதால் தோன்றுகிறது.கூலி உயர்வும் மற்ற உற்பத்தி செலவுகளும் சேர்ந்து விலையை அதிகரிக்கச் செய்கிறது.

   **நெருக்க அல்லது உற்பத்தி வளர்ச்சித் தடை பணவீக்கம்:-** முழு வேலைவாய்ப்பு உற்பத்தி நிலை அடையும் பொழுது, சில பற்றாக்குறை நிலையும், சமனற்ற நிலையும் மற்றும் இறுதிநிலைச் செலவில் உயர்வும் ஏற்பட்டு அதன் விளைவாக பணவீக்கம் ஏற்படக்கூடும்.

   **இலாப உந்து பணவீக்கம்**:- தொழிற்சங்கங்கள் கூலி வீதத்தை உயர்த்த முயற்சிப்பதை போல சில சில்லோர் முற்றுரிமையாளர்களும், அதிகரிக்கும் உற்பத்திச் செலவை உள்ளடக்கி, உச்ச இலாபத்தை ஈட்டுவதற்காக, அளவுக்கதிமாக விலையை உயர்த்துவர்.

   **பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றலாம்**

   1. வரி விதிப்பு அதிகப்படுத்தலாம்.
   2. மூலதன திட்டங்களின் மீதான அரசு செலவைக் குறைத்தல்.
   3. இறக்குமதியில் கட்டுபாடுகள் விதித்தல்.
   4. பங்கு.
   5. விலைக் கட்டுப்பாடு.

சில நேரங்களில் கூலியை நிலை நிறுத்தி வைத்து பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்டது.

## பண வாட்டம்

**பணமதிப்பு உயர்ந்து கொண்டே செல்வதை**, **அதாவது பண்டங்களின் விலை குறைந்து கொண்டே செல்வதை பணவாட்டம் என்று கிரெளத்தர் கூறுகிறார்**. **பணவாட்டம் என்பது பணவீக்கத்திற்கு நேர் எதிரானது**.

**பணவீக்கம் என்பது வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளின் காலத்தைக் குறிக்கும்**. **பணவாட்டம் காலத்தில்**, **மந்தமான வாணிப நிலையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறிக்கும்**.

பணவாட்ட காலத்தில் விலையானது செலவைவிட வேகமாகக் குறைவதால் உற்பத்தியாளர்களும், தொழில் அதிபர்களும் அதிகமான நடவடிக்கைகளிலும் இலாபம் இருக்காது. ஆகவே, முதலீட்டின் அளவு குறையும். இது வேலையில்லாத திண்டாட்டத்துக்கு அடிகோலும், பணவீக்கம், பணவாட்டம் இரண்டுமே தீமையானவை.

அதிக பணவீக்கமும், அதிக பணவாட்டமும் பொருளாதார வளர்ச்சிக்கு தீமையை ஏற்படுத்தும். **ஒரு நாடு வளர்ச்சியைடைந்த நிலையில் இருக்கும் போது பணவீக்கம் இருக்கும்.ஒரு நாடு மந்த நிலையில் இருக்கும் போது பணவாட்டம் இருக்கும்.**

## பண வீக்கம்

| பாதிக்கப்படுபவர்கள் | பயன்பெறுபவர்கள் |
|---|---|
| கடன் கொடுத்தவர் | கடன் வாங்கியவர்கள் |
| நிலையான வருமானம் பெறுபவர்கள் | வியாபாரிகள் |
| அரசு பத்திரங்களில் முதலீடு செய்தவர்கள் | சேமிப்பாளர்கள் |
| இறக்குமதியாளர்கள் | ஏற்றுமதியாளர்கள் |
| வரி செலுத்துபவர் | |
| சுயதொழில் செய்வர்கள் | |

## பணவாட்டம்

| பாதிக்கப்படுபவர்கள் | பயன்பெறுபவர்கள் |
|---|---|
| வணிகர்கள் | நிலையான வருமானம் பெறுபவர்கள் |
| கடன் வாங்கியவர்கள் | கடன் கொடுத்தவர்கள் |
| நிறுவன பங்குகளில் முதலீடு செய்பவர்கள் | |

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : சமூகம் சார்ந்த பிரச்சினைகள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# சமூகம் சார்ந்த பிரச்சினைகள்

## மக்கள் தொகை

- 1872-ல் மேயோ பிரபு காலத்தில் முதன்முதலில் மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது, ஆனால் இக்கணக்கெடுப்பு முறையற்றது.
- 1881 ம் ஆண்டு முதல், ரிப்பன் பிரபு காலத்தில் முறையான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. பின்னர் பத்து வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது.
- 2011-ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு சுதந்திரத்திற்கு பிறகு எடுக்கப்பட்ட 7வது கணக்கெடுப்பாகும்.

| மக்கள்தொகை கணக்கெடுப்பு | 2011 (இந்தியா) |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | 1210193422 |
| ஆண்கள் | 623724248 |
| பெண்கள் | 586469174 |
| மக்கள் அடர்த்தி | 382/1 ச.கி.மி |
| பாலின விகிதம் | 940 பெண்கள் / 1000 ஆண்கள் |
| குழந்தை பாலின விகிதம் | 914 பெண் குழந்தைகள் / 1000 ஆண் குழந்தைகள் |
| வளர்ச்சி விகிதம் | 17.64% |
| உலக மக்கள்தொகை நாள் | ஜீலை 11 |
| இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு நாள் | பிப்ரவரி 9 |
| மொத்த கல்வியறிவு வீதம் | 74.04% |
| ஆண் கல்வியறிவு வீதம் | 82.14% |
| பெண் கல்வியறிவு வீதம் | 65.46% |
| அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலம் | உத்திர பிரேதசம் |
| குறைந்த மக்கள்தொகை கொண்ட மாநிலம் | சிக்கிம் |
| அதிக மக்கள்தொகை கொண்ட யூனியன் பிரேதசம் | டெல்லி |
| குறைந்த மக்கள்தொகை கொண்ட யூனியன் பிரேதசம் | லட்சத்தீவுகள் |
| அதிக பாலின விகிதம் கொண்ட மாநிலம் | கேரளா |
| குறைந்த பாலின விகிதம் கொண்ட மாநிலம் | ஹரியானா |
| அதிக பாலின விகிதம் கொண்ட யூனியன் பிரேதசம் | புதுச்சேரி |
| குறைந்த பாலின விகிதம் கொண்ட யூனியன் பிரேதசம் | டாமன் & டையூ |
| அதிக மக்கள் அடர்த்தி கொண்ட மாநிலம் | பீகார் |
| குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட மாநிலம் | அருணாச்சல பிரேதசம் |
| அதிக மக்கள் அடர்த்தி கொண்ட யூனியன் பிரேதசம் | டெல்லி |
| குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட யூனியன் பிரேதசம் | அந்தமான் & நிகோபார் தீவுகள் |
| அதிக எழுத்தறிவு கொண்ட மாநிலம் | கேரளா |
| குறைந்த எழுத்தறிவு கொண்ட மாநிலம் | பீகார் |
| அதிக எழுத்தறிவு கொண்ட யூனியன் பிரேதசம் | லட்சத்தீவுகள் |
| குறைந்த எழுத்தறிவு கொண்ட யூனியன் பிரேதசம் | தாத்ரா & நாகர் ஹவேலி |

## தமிழ்நாட்டின் மக்கள்தொகை

- 2011-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்களின் எண்ணிக்கை 72,147,039 ஆகும். இதில் 36,009,055 பெண்களும், 36,137,975 ஆண்களும் உள்ளனர்.
- தேசிய அளவில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இது 5.96 விழுக்காடு ஆகும்.
- மக்கள் தொகையில் ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையே பாலின விகிதமாகும்.
- ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் பதினைந்து முதல் நாற்பத்தி ஐந்து வரையுள்ள (இன விருத்திக்கான வயது) பெண்களுக்கும் இடையே உள்ள விகிதத்ததை ஆயிரம் பேருக்கு என கணக்கிடுவதே கருவள விகிதமாகும்.

| மக்கள்தொகை கணக்கெடுப்பு | 2011 (தமிழ்நாடு) |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | 7,21,38,958 |
| ஆண்கள் | 3,61,58,871 |
| பெண்கள் | 3,59,80,087 |
| மக்கள் அடர்த்தி | 555/1 ச.கி.மி |
| பாலின விகிதம் | 995 பெண்கள் / 1000 ஆண்கள் |
| குழந்தை பாலின விகிதம் | 946 பெண் குழந்தைகள் / 1000 ஆண் குழந்தைகள் |
| வளர்ச்சி விகிதம் | 15.60% |
| மொத்த கல்வியறிவு வீதம் | 80.33% |
| ஆண் கல்வியறிவு வீதம் | 86.81% |
| பெண் கல்வியறிவு வீதம் | 73.86% |
| அதிக மக்கள்தொகை கொண்ட மாவட்டம் | சென்னை |
| குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம் | பெரம்பலூர் |
| அதிக பாலின விகிதம் கொண்ட மாவட்டம் | நீலகிரி |
| குறைந்த பாலின விகிதம் கொண்ட மாவட்டம் | சேலம் |
| அதிக மக்கள் அடர்த்தி கொண்ட மாவட்டம் | சென்னை |
| குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட மாவட்டம் | நீலகிரி |
| அதிக எழுத்தறிவு கொண்ட மாவட்டம் | கன்னியாகுமரி |
| குறைந்த எழுத்தறிவு கொண்ட மாவட்டம் | தர்மபுரி |

## மக்கள்தொகை வெடிப்பு

- பிறப்பு விகிதம்
- இறப்பு விகிதம்
- இடப்பெயர்ச்சி

**பிறப்பு விகிதம் கீழ்க்காணும் காரணிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது**

- திருமண வயது
- குழந்தை பிறப்பு அதிகரிப்பு
- சமூக பழக்கங்கள் மற்றும் நம்பிக்கை
- படிப்பறிவின்மை
- பிறப்பு கட்டுப்பாடு முறைகள் பற்றி அறியாமை

## இறப்பு வீதம்

- மக்கள்தொகை பெருக்கத்திற்கு மற்றொரு காரணம் குறைவான இறப்பு வீதம் ஆகும்.

## குடிப்பெயர்ச்சி

- வெளிக் குடிப்பெயர்ச்சியானது மக்கள்தொகை பெருக்கத்தினை குறைக்கிறது.
- உள் குடிப் பெயர்ச்சியானது மக்கள்தொகை பெருக்கத்தினை அதிகரிக்கிறது.

## வெடிப்பிற்கான காரணங்கள்

- அதிக பிறப்பு வீதம்
- குறைவான இறப்பு வீதம்
- இளவயது திருமணம்
- சமுதாய மற்றும் சமயக்காரணங்கள்
- வறுமை
- கல்வியறிவின்மை

## பொருளாதார வளர்ச்சி பாதிப்பு

- பொருளாதார வளர்ச்சிக்கு உழைப்பின் பங்களிப்பு, அதிகமாக தேவைப்பட்டாலும் நமது மக்கள்தொகை தொடர்ந்து வளர்வதால் பொருளாதார வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகிறது.
- காரணங்கள்
  - உணவுப் பற்றாக்குறை
  - உற்பத்தி செய்யாத நுகர்வோர் சுமை
  - தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானம் குறைதல்.
  - சேமிப்பும், முதலீடும் குறைதல
  - வேலையின்மை(அ)குறை வேலையுடைமை
  - மகளிரின் உழைப்பு வீணாதல்
  - உழைப்பின் உற்பத்தித் திறன் குறைதல்.
  - சமூக நலத் திட்டத்தின் கீழ் அதிகச் செலவு
  - வேளாண்மையில் பின் தங்கிய நிலை

## மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தும் வழிகள்

- குடும்ப கட்டுப்பாடு முறைகளை பயன்படுத்துதல்.
- குழந்தைகளின் இறப்பு வீதத்தை கட்டுப்படுத்துதல்.
- நாடு தொழில்மயமாதல்.
- பெண்களின் எழுத்தறிவு வீதம் மற்றும் கல்வியை அதிகரித்தல்.
- காலம் தாழ்த்தி திருமணம் செய்தல்.
- குழந்தை திருமணத்தினை தடுக்க சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல்.

## மக்கள்தொகைப் பற்றிய கோட்பாடுகள்

மக்கள்தொகைப் பற்றி மூன்று கோட்பாடுகள் உள்ளன.

- **மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு**
    - உணவு உற்பத்தி அதிகரிக்கும் போது மக்கள்தொகையும் அதிகரிக்கும்.
    - மக்கள்தொகைப் பெருக்க வீதத்திலும், உணவு உற்பத்தி கூட்டல் விகிதத்திலும் அதிகரிக்கிறது.
    - கிடைக்கும் உணவுப் பொருட்களின் அளவிற்கேற்ப, இயற்கைத் தடைகள் மற்றும் செயற்கைத் தடைகள் மூலம் மக்கள் தொகையை நிலைப்படுத்தலாம்.
    - இயற்கைத் தடைகள் - இவை இறப்பு வீதத்தை அதிகரித்து மக்கள்தொகை வளர்ச்சியை பாதிக்கிறது.
      எ.கா - வறுமை, வியாதிகள், போர்கள், பஞ்சங்கள்.
    - செயற்கைத் தடைகள் - மக்கள் தொகையை குறைக்க மனிதன் மேற்கொள்ளும்முயற்சிகள் செயற்கைத் தடைகள் எனப்படும்.
- **உத்தம அளவுக் கோட்பாடு**
    - 1924-இல் எட்வின் கேனன் என்பவரால் உத்தம அளவு மக்கள்தொகைக் கோட்பாடு வெளியிடப்பட்டது. எட்வின் நாடுகளின் செல்வம் என்னும் நூலின் மூலம் அவர் உத்தம அளவுக் கோட்பாட்டை வெளியிட்டார்.
    - மக்கள்தொகையில் ஏற்படும் மாற்றங்களும், அதன் விளைவாக தலா வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும் இடையே உள்ள தொடர்பினை உத்தம அளவுக் கோட்பாடு விளக்குகிறது.
    - இயற்கை வளங்கள், மூலதனப் பொருட்களின் இருப்பு மற்றும் தொழில்நுட்ப நிலை ஆகியவற்றிற்கு ஏற்ப சிறந்த மக்கள்தொகை, உத்தம அளவு மக்கள்தொகை எனலாம்.
    - உத்தம அளவு மக்கட்தொகை அளவில் தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும் (அ) தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும் நிலையில் உள்ள மக்கட் தொகையே உத்தம அளவு மக்கட்தொகை ஆகும்.

- **மக்கட் தொகை வளர்ச்சிக் கட்ட கோட்பாடு**
  - இக்கோட்பாடு பிறப்பு வீதத்திற்கும், இறப்பு வீதத்திற்கும், உள்ள உயர்வை விளக்குகிறது.
  - பிறப்பு வீதம் - ஒரு வருடத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்ற வீதத்தை குறிக்கின்றது.
  - இறப்பு வீதம் - ஒரு வருடத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை பேர் இறக்கின்றனர் என்ற வீதத்தை குறிக்கின்றது.

மக்கள்தொகை வளர்ச்சியில் 3 நிலைகள் உள்ளன.

## முதல் நிலை - உயர்ந்த பிறப்பு வீதமும் உயர்ந்த இறப்பு வீதமும்

- நாடு முன்னேற்றம் குறைந்து, பின் தங்கிய நிலையில் இருக்கும்.
- வேளாண்மை மக்களின் முக்கியத் தொழிலாக இருக்கும்
- இந்தக் கட்டத்தில் அதிகப் பிறப்பு வீதம், அதிக இறப்பு வீதத்தை சரிக் கட்டுவதால் மக்கள்தொகை வளர்ச்சி அதிகமாக இல்லை. அது தேக்கமுற்று காணப்படுகிறது.

## இரண்டாம் நிலை - உயர்ந்த பிறப்பு வீதமும், குறைந்த இறப்பு வீதமும்

- நாடு முன்னேறும் போது, தொழில் வளர்ச்சி அதிகரித்து, அதிக வேலைவாய்ப்பும் உருவாகின்றன.
- உயர்ந்த அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக போதிய மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெறுவதால் இக்கட்டத்தில் உயர்ந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதத்திற்கிடையே வேறுபாடு ஏற்படும்.
- மக்கள்தொகை வளர்ச்சி வீதம் அதிகமாகிறது.

## மூன்றாம் நிலை - குறைந்த இறப்பு வீதமும், குறைந்த பிறப்பு வீதமும்

- பொருளாதார முன்னேற்றம் காரணமாக சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது.
- மக்களின் மனப்பான்மை மாற்றமாகிறது. கல்வியறிவின் காரணமாக, சிறு குடும்ப முறைக்கு மாறுகின்றனர். எனவே, பிறப்பு வீதம் குறைகிறது.
- நல்ல சுகாதார வசதிகள் செயல்படுவதால் இறப்பு வீதம் குறைகின்றது.
- இக்கட்டத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள் குறைவாக இருப்பதால் மக்கள்தொகை வளர்ச்சி நிலையாக இருக்கும்.
- உலக நாடுகள் அனைத்தும் மூன்று நிலைகளையும் கடக்க வேண்டும்.

# கல்வி

## இந்தியாவில் கல்வி

- 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவில் எழுத்தறிவு விகிதம் 74.04% (ஆண்களின் எழுத்தறிவு விகிதம் 82.12% பெண்களின் எழுத்தறிவு விகிதம் 65.46%
- இந்தியாவிலேயே அதிக எழுத்தறிவு பெற்ற மாநிலமாக கேரளாவும் (93.9%) குறைவான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக பீகாரும் (63.8%) உள்ளன.
- தமிழ்நாட்டின் எழுத்தறிவு விகிதம் (80.3%)
- ஆறு முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கான கல்வியை அடிப்படை உரிமையாக்கும் 21A என்ற உறுப்பு அரசமைப்புச் சட்டத்தின் 86ஆவது திருத்தம் (2002)மூலம் அடிப்படை உரிமைகளில் சேர்க்கப்பட்டது.
- குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009 (Right of children to Free and compulsory Education Act of 2009) தனியார் பள்ளிகளில் 25% இடங்களை இலவசமாக குழந்தைகளுக்கு வழங்க வழி செய்கிறது.
- நாட்டிலுள்ள தொடக்கப்பள்ளிகளில் 80% அரசு பள்ளிகளாகவோ, அரசின் உதவிப் பெறும் பள்ளிகளாகவோ உள்ளன.
- தொடக்கக் கல்வியை பொதுவுடமையாக்கும் ( Universalization of Primary Education ) நோக்கத்தோடு அனைவருக்கும் கல்வித் திட்டம் (Sarva Siksha Abiyan) 2001ல் தொடங்கப்பட்டது.
- 2017க்குள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி அளிக்கவும் ( Universalization of Secondary Education ) 2020 க்குள் அதை நிலைநிறுத்தவும் R M S A ( ராஷ்டிரிய மத்யாமிக் சிஷா அபியன்) எனப்படும் அரசு இடைநிலைக் கல்வித் திட்டம் 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தேசிய எழுத்தறிவு திட்டம் ( National Literacy Mission), 2010 ஆம் ஆண்டு முதல் படிக்கும் பாரதம் (Saakshar Bharat) என்ற பெயரில் பெண் எழுத்தறிவுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.
- உயர்கல்வி வழங்குவதில் சீனா மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு அடுத்தப்படியாக இந்திய மூன்றாவது இடத்தில் உள்ளது.
- உயர்கல்வி வழங்குவதில் பல்கலைக்கழக மானியக்குழு முக்கிய பங்கு ஆற்றுகிறது.
- பல்கலைக்கழக மானியக்குழு 1948ல் அமைக்கப்பட்ட இராதாகிருஷ்ணன் கமிட்டியின் பரிந்துரைப்படி உருவாக்கப்பட்டு, 1956 முதல் சட்டப்பூர்வமான அமைப்பாக செயலாற்றி வருகிறது.
- தொழில்நுட்பக்கல்வியை அகில இந்திய அளவில் நெறிப்படுத்தவும், நிர்வகிக்கவும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்கழகம் ( All India Council of Technical Education) 1988 ஆம் ஆண்டு சட்டப்பூர்வமான அமைப்பாக உருவாக்கப்பட்டது.
- தேசிய அளவில் ஆசிரியக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் தேசிய ஆசிரியர் கல்விக்கழகம் ( National Council of Teachers Education ) 1995 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

- 1964 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கோத்தாரிக் கல்விக்குழு, 1966 இல் அளித்த அறிக்கையின்படி, 1968 ஆம் ஆண்டு தேசிய கல்விக்கொள்கை (National Education Policy) கொண்டு வரப்பட்டது.
- தேசிய வருமானத்தில் 3 விழுக்காடு கல்விக்காக செலவிட வேண்டும் என்பதும், 10+2+3 முறையில் கல்வி அமைய வேண்டும் என்பதும் கோத்தாரிக் கமிட்டி பரிந்துரையின் முக்கிய அம்சமாகும்.
- 1986 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி ஆட்சிக்காலத்தில் புதிய கல்விக் கொள்கை கொண்டு வரப்பட்டது.
- புதிய கல்விக்கொள்கையின்படி கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டுடன், நவோதய வித்யாலயா பள்ளிகள் தொடங்கப்பட்டன.
- தற்போது இந்தியாவில் 576 ஜவஹர் நவோதய வித்யாலயா பள்ளிகள் செயல்பட்டு வருகின்றது.
- நவோதய பள்ளிகள் CBSE பாடத்திட்டத்தில் இயங்கும் இருபாலின உறைவிடப் பள்ளிகளாகும். ( Coeducational Residential Schools)
- தமிழ்நாடு அரசு கட்டாய இருமொழி கொள்கையைப் பின்பற்றுவதால், "மும்மொழிக் கொள்கை" கொண்ட நவோதய பள்ளிகள் தமிழ்நாட்டில் மட்டும் தொடங்கப் பெறவில்லை.
- மத்திய அரசு பணியாளர்களது குழந்தைகளின் சீரான கல்வி நலன் கருதி கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் 1962 இல் தொடங்கப்பட்டன.

## தமிழ்நாட்டில் எழுத்தறிவு

- 1951 முதல் 2001 வரையிலான காலக்கட்டத்தில், தமிழ்நாட்டு மக்களின் எழுத்தறிவு விழுக்காடு மும்மடங்காக பெருகியுள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கீட்டின் படி தமிழ்நாட்டில் 80.35 விழுக்காடு மக்கள் எழுத்தறிவு பெற்றவராகத் திகழ்கின்றனர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கீட்டின் படி எழுத்தறிவு பெற்றவர்கள் அதிகம் உள்ள மாவட்டமாக கன்னியாக்குமரியும் (87.55 விழுக்காடு) எழுத்தறிவு பெற்றவர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள மாவட்டமாக தர்மபுரியும் (61.39 விழுக்காடு) உள்ளன.

# சுகாதாரம்

- குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல் , பெண்களுக்கு மகப்பேறு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல், தொற்று நோய்களைத் தடுத்தல், ஊட்டச்சத்துக் குறைபாடுகளைப் போக்குதல் போன்றவை அரசாங்கத்தின் முக்கிய நலவாழ்வு குறிக்கோள்களாகும்.
- குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் பொருட்டு நாடெங்கிலும் ஏராளமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டம் எனப்படும் NRHM ( National Rural Health Mission) திட்டப்படி ASHA (Accredited Social Health Activist) தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் மூலம் தடுப்பூசி போட வேண்டியதன் அவசியம் பொது மக்களுக்கு விளக்கப்படுகிறது.
- பிறக்கும் குழந்தைகளுக்கு காச நோய் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு BCG தடுப்பூசி போடுதல், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரண ஜன்னி, ஆகிய மூன்று நோய்களையும் தடுக்க முத்தடுப்பு ஊசி (DPT) போடுதல் போன்ற நடவடிக்கைகள் அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படுகிறது.
- கருவில் வளரும் சிசு மரணத்தை தடுக்கும் பொருட்டு கருவுற்ற தாய்மார்கள் ஊட்டச்சத்து மிக்க உணவைப் பெறுவதற்காக நிதி உதவி அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.
- மலேரியா, டெங்கு போன்ற கொசுவினால் பரவும் நோய்களைத் தடுக்கும் பொருட்டு கொசு மருந்து அடித்தல், சுற்றுப்புறத் தூய்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

# வேலைவாய்ப்பின்மை

## வேலையின்மை

- தொழிலாளர்கள் வேலை செய்யும் தகுதியும் விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும்.

## வேலையின்மை அளவீடுகள்

- ஒரு நபர்> ஒரு நாளைக்கு 8 மணி நேரம் என்ற அளவில், ஒரு வருடத்திற்கு 73 நாட்கள் வரை மட்டும் வேலையில் நியமனம் செய்யப்படுவதையே குறிக்கிறது.
- பகவதி கமிட்டி (1973) பரிந்துரையின்படி வேலையின்மையை 3 வகையாகப் பிரிக்கலாம்.
    - முதன்மை நிலை வேலையின்மை
    - வாராந்திர நிலை வேலையின்மை
    - தினமும் வேலையின்மை நிலை

## வேலையின்மைக்கான காரணங்கள்

- அதிக மக்கள்தொகை வளர்ச்சி
- போதுமான பொருளாதார வளர்ச்சி வீதமின்மை
- வேளாண்மை தவிர பிற துறைகளில் வேலை வாய்ப்பு குறைவு.
- பருவ கால வேலைவாய்ப்பு
- கூட்டுக் குடும்ப அமைப்பு
- இந்தியப் பல்கலைக்கழகத்திலிருந்து பெருகி வரும் மாணவர்கள்
- குறைவான தொழில் வளர்ச்சி

## வேலையின்மையின் வகைகள்

## அமைப்பு வேலையின்மை

- உற்பத்தித் திறன் குறைவினால் வருவது.

## வெளிப்படை வேலையின்மை

- படித்த மற்றும் படிக்காத மக்களிடையே காணப்படும் வேலையின்மை.

## மறைமுக வேலையின்மை

- உற்பத்திக்கு பங்களிப்பு செய்யாமல் ஒருவா வேலையில் இருப்பது. அவரை நீக்கினாலும் உற்பத்தித் திறன் மாறாது.

## பருவ கால வேலையின்மை

- விவசாயத் துறையில் வருடம் முழுவதும் வேலை இருப்பதில்லை. குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இருக்கும்.

## இடைக்கால வேலையின்மை

- ஒருவர் ஒரு பணியில் இருந்து மற்றொரு பணிக்கு மாறும்போது ஏற்படுகிறது.

## உராய்வு வேலையின்மை

- சந்தை நிலவர மாற்றத்தால் தேவை குறைவு மற்றும் புதிய தொழில்நுட்ப அறிமுகம் காரணமாக ஏற்படுவது.

## குறைவேலையுடைமை

- ஒருவர் தன் கல்வித் தகுதிக்கு கீழான வேலையில் இருப்பது.

## சுழற்சி வேலையின்மை

- தொழிலாளர்கள் உபரியாக கிடைக்கும் காலங்களில் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது.

# வறுமை

- உலக வங்கி (1990 ம் ஆண்டு) வரையறைப்படி, " வறுமை என்பது, குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை அடைய முடியாத, திறனற்ற நிலையை குறிக்கிறது."
- வறுமை பற்றிய முறையான மதிப்பீடு முதல் முதலில் 1971 இல் டண்டேகர் மற்றும் ராத் என்ற இரு பொருளியல் அறிஞர்களால் செய்யப்பட்டது. ஒரு நாளைக்கு 2250 கலோரி உணவு பெறத் தேவையான செலவுத் தொகையினை 'வறுமைக் கோடு' என அன்றைக்கு வரையறுத்திருந்தார்கள்.
- திட்டக்குழு இதை கிராமப்புறத்துக்கு 2400 கலோரி, நகர்புறத்துக்கு 2100 கலோரி என 1973-74 இல் மாற்றியமைத்தது.
    - வறுமை விகிதம் = வறுமைக்கோட்டுக்கு (BPL) கீழுள்ளோர் / மக்கள் தொகை

## தாண்டேகர் (1981) கூற்றுப்படி

- எப்படியாயினும் வறுமை என்பது போதுமான வருமானத்தின் தேவையே ஆகும்.

## வறுமையின் வகைகள்

- முழு வறுமை
- ஒப்பீட்டு வறுமை
- தற்காலிக வறுமை
- முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைவறுமை
- கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழ்மை

## முழு வறுமை

மக்களுக்கு போதுமான உணவு, உடை, உறைவிடம் இல்லாத நிலையை முழு வறுமை என்கிறோம்.

## ஒப்பீட்டு வறுமை

மக்களின் ஒரு பிரிவினரை / குழுவினரை, பிற குழுக்களோடு ஒப்பிடுதல் (உயர்தர, நடுத்தர, குறைவான வருமானம் பெறுபவர்கள்)

(எ.கா) 1 லட்சம் சம்பளம் வாங்கும் நபர் முன், 10000 ரூபாய் சம்பளம் வாங்குபவர், ஏழையாக (அல்லது) வறுமையில் உள்ளவராகக் கருதப்படுகிறார்.

## 1. தற்காலிக வறுமை (அ) முற்றிய வறுமை

இந்தியா போன்ற நாடுகளில் பருவமழை குறையும் போது, விவசாயம் பொய்த்து அதனால் உழவர்கள் தற்காலிகமான ஏழ்மை நிலை அடைகிறார்கள். இவ்வறுமை நிலையிலேயே அவர்கள் நீண்ட காலமாக வாழும் போது அந்நிலை முற்றிய வறுமை (அ) அமைப்பு சார்ந்த வறுமை எனப்படும்.

## 2. முதல் நிலை வறுமை மற்றும் இரண்டாம் நிலை வறுமை

ரவுண்டிரி (1901) என்பவர் இவ்விரு வகை வறுமைகளுக்கிடையேயான வேறுபாட்டை விளக்கினார்.

- **முதல் நிலை வறுமை**

குடும்பங்களில் வாழ்க்கை நடத்த மொத்த வருமானத்தைக் கொண்டு, குறைந்தபட்ச, அத்தியாவசிய பொருள்களைக் கூட வாங்க முடியாத பற்றாக்குறையான நிலையைக் குறிக்கும்.

- **இரண்டாம் நிலை வறுமை**

குடும்பங்களின் வருமானம் வாழ்க்கை நடத்த போதுமானதாக இருக்கும். ஆனால் அதன் ஒரு பகுதியானது உபயோகமான (அ) உபயோகமற்ற செலவுகளுக்கான செலவிடப்படுவதால் வறுமை ஏற்படுகிறது. முதல் நிலை வறுமையைக் காட்டிலும், இரண்டாம் நிலை வறுமை மோசமானது. (எ.கா.) குடிப்பழக்கம்

## 3. கிராமப்புற ஏழ்மை மற்றும் நகர்ப்புற ஏழ்மை

- **கிராமப்புற ஏழ்மை**

கிராமங்களில் வாழும் பெரும்பான்மையான ஏழை மக்கள் நிலங்களை சொந்தமாக வைத்திருப்பதில்லை. எனவே
கூலி வேலையே செய்கின்றனர் அதிலும் ஒரு சில மாதங்களே வேலை கிடைக்கும் இது கிராமப்புற ஏழ்மை எனப்படும்.

- **நகர்ப்புற ஏழ்மை**

நகர்ப்புறங்களில் வாழும் மக்கள், நீண்ட நேரம் உழைத்து மிகக்குறைவான வருமானத்தையே பெறுகின்றனர்.

## ஒரு நாட்டின் ஏழ்மை நிலை இரண்டு காரணிகளைப் பொறுத்தது.

- நாட்டு வருமானத்தின் சராசரி நிலை
- நாட்டு வருமான பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வின் அளவு.

## வறுமைக்கோடு

- வறுமைக்கோடு என்பது, குறைந்தபட்ச வருமானம், நுகர்வு அல்லது பண்டங்கள் மற்றும் பணியினை ஒரு தனிநபர் பெறும் அளவினைக் குறிக்கும்.

## வறுமைக் கோட்டினை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழுக்கள்

- லக்டவாலா குழு - வறுமைக்கோடு பற்றிய முதல் வரையறை
- சுரேஷ் டெண்டுல்கர் குழு
  - இக்குழு தற்போதைய வறுமைக் கோட்டிற்கான புது வரையறையை வழங்கியுள்ளது.
- **ரங்கராஜன் தலைமையிலான குழு**
  - வறுமைக் கோட்டில் வாழும் மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்களை ஆய்வு செய்ய ஏற்படுத்தப்பட்டது.

## சுரேஷ் டெண்டுல்கர் புதிய வரையறை (2009 டிசம்பர்)

- தற்போது வறுமைக் கோடானது கலோரி அடிப்படையில் அல்லாமல், மாதந்தோறும் மக்கள் செலவு செய்யும் பணத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

| Monthly Percapita Consumption Expenditure | |
|---|---|
| நகர்ப்புறம் | 1000 ரூபாய் / மாதம் |
| கிராமம் | 816 ரூபாய் / மாதம் |

## இந்தியாவில் வறுமைக்கான காரணங்கள்

- வேலையின்மை (அல்லது) குறைவேலையுடைமை.
- மக்கள்தொகை அழுத்தம்.
- ஒரு நபரைப் பொருளாதார ரீதியாக பலர் சார்ந்துள்ளளனர். இது வறுமைக்கு வழிகோலுகிறது.
- இந்திய வேளாண்மையைச் சார்ந்து அதிக மக்கள் உள்ளனர். மேலும் உற்பத்தித் திறனும் குறைவாகவே உள்ளது.
- மூலதனம் மிகக் குறைவாகவே உள்ளது.
- கல்வியறிவின்மை
- கிராமப்புறங்களில் நிதி குறைவாகவே கிடைக்கிறது. மேலும் சந்தை வாய்ப்புகளும் குறைவு.
- பொது விநியோகத் திட்டம் சரியான முறையில் அனைத்து தரப்பினரையும் சென்று அடையவில்லை

## வறுமைக்கெதிரான கொள்கைகள்

- மறைமுக நடவடிக்கை
- நேரடியான நடவடிக்கை

## மறைமுக நடவடிக்கைகள்

## நிலச் சீர்திருத்தம்

- அரசு, நிலச் சீர்திருத்த சட்டங்கள் மூலம், அனைத்து மக்களுக்கும் நிலங்கள் கிடைக்க வழி ஏற்படுகிறது. எனவே கிராமப்புற வறுமை குறையும்.

(எ.கா)

- ஜமீன்தார் முறை ஒழிப்பு
- நில உச்ச வரம்பு சட்டம்
- நில ஒருங்கிணைப்பு முதலான சட்டங்கள்
- குத்தகைக்காரர் சட்டம்

## உள்நாட்டு உற்பத்தியில் அதிக வளர்ச்சி

- வளர்ந்து வரும் இந்திய மக்கள் தொகையை ஈடுகட்ட அதிக அளவு வளர்ச்சி தேவைப்படுகிறது. அதன் மூலம் வறுமை ஒழிய வாய்ப்புக் கிடைக்கும்.
- அதிக மக்கள்தொகை வளர்ச்சி காரணமாக, நாட்டின் சராசரி வருமானம், தலா வருமானம் குறைகிறது.
- எனவே மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையும்.

## நேரடியான நடவடிக்கை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

- சுய வேலைவாய்ப்புத் திட்டம்
- கூலி வேலைவாய்ப்புத் திட்டங்கள்
- சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்
- உணவு பாதுகாப்புத் திட்டங்கள்

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : தொழில் வளர்ச்சி**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தொழில் வளர்ச்சி

## பின்வரும் முக்கிய நோக்கங்களுக்காக தொழில் வளர்ச்சி இன்றியமையாததாகும்.

1. வருவாயை உயர்த்துதல்
2. தேவையை நிறைவேற்றுதல்
3. ஏற்றுமதி, இறக்குமதியில் உள்ள பாகுபாடு.
4. உபரியான தொழிலாளர்களைப் பயன்படுத்துவது
5. பொருளாதாரத்தை வலுவுடையதாக்கல்.
6. பாதுகாப்பு நோக்கம்.
7. அடிப்படைத் தொழில்கள்.

## 1948- ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை

இந்திய அரசு தொழில் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கு பெற முன்வந்தது. ஆனால் அதே நேரத்தில் அரசின் பொருள் வளம் தொழில் வளர்ச்சியின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுமளவிற்கு இல்லையென்பதையும் உணர்ந்தது. ஆதலால் தொழில் வளர்ச்சியில் தனியாருக்கும் பங்குள்ள ஒரு கூட்டுப் பொருளாதாரத்தை உருவாக்க முடிவு செய்தது. இந்த அடிப்படையில் அரசு தனது தொழிற்கொள்கையை விரிவாக அறிவித்தது.

கூட்டுப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றி தொழில்களைக் கீழ்க்கண்ட நான்கு வகைகளாகப் பிரித்தது.

1. இராணுவத் தளவாடங்கள், குண்டுகள் உற்பத்தி செய்தல், அணுசக்தியை உருவாக்குதல்.
2. நிலக்கரி, இரும்பு, தந்தி, விமானம் கட்டுதல், கப்பல் கட்டுதல், தொலைபேசி, வானொலி தொடர்பான பொருட்களைத் தயாரித்தல், சுரங்க எண்ணெய் எடுத்தல் ஆகியவை இரண்டாம் வகைத் தொழில்களாகும்.
3. மூன்றாவது எந்திரங்கள் உற்பத்தி, உர உற்பத்தி போன்ற அடிப்படைத் தொழில்களின் வளர்ச்சிக்காக அரசு திட்டமிட்டு அவற்றைச் செயல்படுத்தலாம்.
4. பிற தொழில்களை எல்லாம் தனியாரும் கூட்டுறவுத் துறையினரும் ஏற்று நடத்தலாம். இவற்றிற்கு அரசின் உதவிகள் கிடைக்கும்.

1948-வது ஆண்டு கொள்கை கலப்புப் பொருளாதார அடிப்படையைக் கொண்டது.

## 1958- ஆம் ஆண்டின் தொழிற்கொள்கை

1948- ஆம் ஆண்டின் தொழிற்கொள்கை எட்டு ஆண்டுகள் நடைமுறையில் இருந்தன. இந்தக் காலத்தில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

- இந்தத் தொழிற்கொள்கை தொழில்களை மூன்று வகைகளாகப் பிரித்தது. ராணுவத்தளவாடங்களையும், குண்டுகளையும் உற்பத்தி செய்தல், இரும்பு எஃகுத் தொழில், நிலக்கரி, சுரங்க எண்ணெய், விமானம் கட்டுதல், விமானப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து போன்ற 17 தொழில்கள் முதல் வகையைச் சேரும்.

- இந்தத் தொழிற்கொள்கை பாகுபாடு கட்டுப்பாட்டுடன் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல. அரசின் விருப்பப்படி பகுப்பு முறையை மாற்றிக் கொள்ள வழியுண்டு.
- சிறு தொழில்களை வளர்க்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டது. இதற்காகப் பயிற்சியளித்தல், தேவையான வசதிகள் செய்து தரல், தொழிலாளர்களுக்குத் தூண்டுதல் அளித்தல் ஆகிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமென்றும் அறிவித்தனர்.
- நாட்டின் பல பகுதிகளிலும் ஒன்று போல் தொழில் வளர்ச்சியடையச் செய்ய அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.
- திறமை மிக்கத் தொழிலாளர்களின் பற்றாக்குறையைப் போக்க அரசு தக்க பயிற்சியளிக்க வழி செய்யும்.

## 1977 -ஆம் ஆண்டு தொழிற் கொள்கை

- ஜனதா அரசு இத்தொழிற்கொள்கையை அறிவித்தது. இந்தக் கொள்கையானது கிராமத் தொழில்கள், சிறு மற்றும் குடிசைத் தொழில்களை , மறுவரையறை செய்தது. சிறு தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை 180-ல் இருந்து 500 ஆக விரிவடையச் செய்தது.
- முதல் முறையாக சிறிய அலகு (Tiny Unit) விவரிக்கப்பட்டது. 50,000 (1971 சென்செஸ்)-க்கும் குறைவான மக்கள் தொகை உள்ள கிராமம் மற்றும் நகரங்களில் ரூ1 லட்சத்துக்கும் குறைவான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் முதலீடு செய்யப்பட்டது.
- இக்கொள்கையானது (Industrial Policy Statement)வேளாண்மைத் துறை மற்றும் தொழில் துறைக்கு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## தத் குழு (1969)

திரு. சுபிமால் தத் தலைமையில் தொழிற்சாலைகளின் உரிமக் கொள்கையின் மீது மற்றுமொரு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது தத் குழு என்று அழைக்கப்பட்டது.

## தத் குழுவின் பரிந்துரைகள்

- பெரும் தொழிற்குழுமங்களுக்கு மட்டும், முதன்மை மற்றும் பெரும் முதலீட்டு நிறுவனங்கள் அமைப்பதற்கு உரிமம் வழங்க வேண்டும்.
- தொழில் தொடங்குவதற்கான உரிமம் தொடர்பான கொள்கையை மறு ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும்.
- பெரும் நிறுவனம் மற்றும் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் ஏகபோக உரிமையை கையாள, ஏகபோக உரிமை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.
- தொழிற்சாலைகளை முதன்மைத் துறைகள், பிற முதன்மைத் துறைகள், ஒதுக்கீடு துறைகள் என்று வகைப்படுத்த வேண்டும்.

### MRTP- சட்டம் 1969

- வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை தடுக்கும் சட்டம் (**Monopolistic & Restrictive trade Practices Act** 1969)
- பொருளாதார அமைப்பில் ஒரு சிலரிடம் மட்டும் பொருளாதார வலிமை குழுமி இருப்பதை உறுதி செய்யவும்.
- வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை தடுக்கும் சட்டமானது பொருளாதார சக்திகள், வர்த்தகம், நுகர்வோரின் விருப்பம் ஆகியவற்றில் ஏகபோக உரிமைக் கொள்வதை தடை செய்கிறது.

## அந்நியச் செலவாணி ஒழுங்குமுறை சட்டம் 1973 (FERA – Foreign Exchange Regulation Act 1973)

முன்னர் இயற்றப்பட்ட சட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவும், தடைகளை நீக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. FERA பொருளாதார வீழ்ச்சியில் இருந்து காக்கவும் ஒழுங்குபடுத்தவும் இயற்றப்பட்டது. இதில் மிகவும் கடுமையான விதிகள் உள்ளன. இதை மீறும் போது (அ) குற்றம் விளைவிக்கும் போது FERA மூலம் சிறை தண்டனை விதிக்கப்படும்.

## 1988 ஆம் ஆண்டு தொழிற்கொள்கை (இராஜீவ் காந்தி அரசின் கொள்கை)

- பின்தங்கிய மாவட்டங்களில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டுமானங்களை அளிக்க வேண்டும். ( தொலைத் தொடர்பு, மின்சாரம், தண்ணீர்)
- உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

### 1991- ஆம் ஆண்டிற்கான புதிய தொழிற்கொள்கை (ஜீலை 24) (LPG)

- உரிமம் பெறும் முறை 8 துறைகளை தவிர பிற துறைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.
- தனியார் முதலீடுகள் அதிகளவு அனுமதிக்கப்பட்டது.
- அந்நிய நேரடி முதலீடு இந்தியாவில் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.
- உற்பத்தியில் நிலையான வளர்ச்சி.
- இலாபகரமான வேலைவாய்ப்பு.
- மனித வளத்தை முழுமையாக பயன்படுத்துதல்.
- தனியார்மயம், தாராளமயம், உலகமயம் கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

## சிறுகுறு தொழில்கள்

- 1955- ம் ஆண்டு திட்டக்குழு சிறு, குறு, நடுத்தர தொழில்கள் மேம்பாட்டை கண்டறிய கார்வே தலைமையில் குழு அமைக்கபட்டது.
- 2வது 5-ஆண்டு திட்ட காலத்தில் சிறு தொழில்களைப் பற்றி ஆராய்ந்த ஜப்பான் வல்லுநர் குழு, தொழிற்பேட்டைகள் அமைக்க பரிந்துரை செய்தது.
- எஸ்.பி. குப்தா என்ற திட்ட குழு உறுப்பினர் 10-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சிறு தொழில்களுக்கு வரிச்சலுகை அளிக்க பரிந்துரை செய்தார்.

## MSME- நுண் சிறு (ம) நடுத்தர நிறுவனங்களின் முன்னேற்ற சட்டம் 2006 Micro- Small & Medium Enterprises.

- நடைமுறைக்கு வந்த நாள் 02.10.2006 முதலீட்டு உச்ச வரம்பு அடிப்படையில் தொழில்கள் பிரிக்கப்பட்டன.

## இந்திய தொழில் முன்னேற்ற வங்கி IDBI (Industrial Development Bank of India)

- 1964-ல் தொடங்கப்பட்டது.
- 1976-ல் தன்னாட்சி அமைப்பாக மாறியது.
- 1976-ல் இருந்து அரசின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.
- 1976-க்கு முன் RBI – ன் கட்டுப்பாட்டில் இருந்தது.
- வளர்ச்சி வங்கிகளில் தலைமை வங்கியாக செயல்பட்டது.

**IC ICI – Industrial Credit and Investment Corporation of India-** 1955

- இந்த கழகம் தனியார் தொழில், சிறு தொழில், நடுத்தர தொழில்களுக்கு நடுத்தர நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது.
- கூட்டுறவுத் துறை தொழில்களுக்கும் கடன் வழங்குகிறது.
- பன்னாட்டு மூலதன சந்தையிலிருந்து அந்நிய செலவாணியை கடனாக வழங்குகிறது.
- 1994 முதல் நிறுவனமாக மாற்றப்பட்டு தனியார் வங்கியாக செயல்படுகிறது.

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : ஐந்தாண்டு திட்டங்களும் அதன் மதிப்பீடும்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# ஐந்தாண்டு திட்டங்களும் அதன் மதிப்பீடும்

## பொருளாதாரத் திட்டமிடல்

- பொருளாதாரத் திட்டமிடல் என்பது இன்றைய வளரும் நாடுகளுக்கு இன்றியமையாததாகும். வளர்ந்த நாடுகள் பொருளாதார நிலைப்பாட்டிற்காகவும், வளரும் நாடுகள் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காகவும் திட்டமிடுகின்றன.

## திட்டமிடுதலின் வரலாறு

- சோவியத் ரஷ்யாவில் 1917 ம் ஆண்டில் ரஷ்ய புரட்சிக்கு பின்பு 1918 முதல் 1921 ஆம் ஆண்டு வரை கம்யூனிசப் போர் நடந்தது. அதன் பின்பு 1921 முதல் 1924 வரை புதிய பொருளாதாரக் கொள்கைகள் நடப்பில் இருந்தன. 1924 முதல் அரசு, கிடைக்கக் கூடிய வளங்களைப் பற்றி விரிவான ஆய்வு மேற்கொண்டு 1928 ஆம் ஆண்டு தனது முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை செயல்படுத்தி அதில் வெற்றியும் கண்டது. 1920-ஆம் ஆண்டு ஜோசப் ஸ்டாலின் சோவியத் ரஷ்யாவில் குடியானவர்கள் சமூகத்திலிருந்து சக்தி வாய்ந்த தொழிற்துறையாக மாற்ற ஐந்தாண்டுத் திட்டத்தை நோக்கமாக கொண்டு அறிமுகப்படுத்தினார்.

## திட்டமிடுதலின் பிரச்சனைகள்

- திட்டமிடுதலுக்கு ஒரு வலிமை மிக்க, தகுதிவாய்ந்த மற்றும் ஊழலற்ற ஆட்சி செய்தல் அவசியமானது என்று ஆர்தர் லூயிஸ் குறிப்பிடுகிறார். ஆனால் பெரும்பாலான வளர்ச்சி குறைந்த நாடுகளில் அத்தகைய நல்லரசுகள் இல்லை. எனவே திட்டமிடுதலில் வளர்ந்த நாடுகளை விட வளரும் நாடுகள் அதிக சிக்கல்களை சந்தித்தன. மேலும் வளரும் நாடுகளில் வேளாண்மையை சார்ந்த நிலையும், அதிக மக்கள் தொகை அழுத்தமும் திட்டமிடுதலில் வேறு முக்கிய பிரச்சனைகளாக இருந்தன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் (எ.கா. இங்கிலாந்து) பகுதி சார்ந்த திட்டமிடல் (Partial Planning) காணப்படும். சமத்துவப் பொருளாதாரத்தில் (எ.கா. ரஷ்யா) முழுமையானத் திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பு இருக்கும். கலப்புப் பொருளாதாரத்தில் (எ.கா. இந்தியா) தனியார்துறை மற்றும் பொதுத்துறை இரண்டுமே திட்டமிடுதலில் மிக முக்கியப் பங்கினை வகிக்கும்.

## பொருளாதாரத் திட்டங்கள்

- அரசாங்கத்தின் திட்டங்களை, குறைந்த அளவு இயற்கை முதலீட்டுடன் மக்கள் நலனுக்குப் பயன்படுத்துதல் ஒரு சட்டமாக்கப்பட்டது.
- சுதந்திரத்திற்குப் பிறகு திட்டக் கமிஷன் 1950-ம் ஆண்டு, ஜவஹர்லால் நேரு தலைமையில் அமைக்கப்பட்டது. அதன்படி, 1951-ம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டம் இயற்றப்பட்டது.

## திட்டங்களின் முக்கிய நோக்கங்கள்

- இதன் நீண்ட கால நோக்கங்கள் இந்தியப் பொருளாதாரத்தை வளர்த்தல், தன்னிறைவு மற்றும் வேலைவாய்ப்பைப் பெருக்குதல்.
- ஏற்றுமதி, இறக்குமதி நிர்ணயம், இதன் அடுத்த முக்கிய நோக்கமாகும்.
- அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றம், திட்டக் கமிஷனின் மிகப் பெரிய வெற்றியாகும்.

## திட்டங்களின் வகைகள்

- மையத் திட்டம் (Centralised Planning)
- தூண்டும் திட்டம் (Planning by Inducement)
- சுட்டிக்காட்டும் திட்டம் (Indicative planning)
- சுழல் திட்டம் (Rolling planning)

## மையத் திட்டம் (Centralised Planning)

இது ரஷ்யா போன்ற சமத்துவத் திட்டமிடல் கொண்ட நாடுகளில் காணப்படும். இது ஆணைத்திட்டம் (அ) கட்டளைத் திட்டம் எனப்படும். அதாவது அடிப்படைத் தீர்மானங்களால் தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? அல்லது வேளாண்துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? தொழில்துறை என்றால் கனரக தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? இல்லை நுகர்வுப் பொருள் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? என்பது போன்ற முடிவுகளை அரசே முடிவு செய்யும். இதன் நன்மை யாதெனில் திட்டங்களை மிக வேகமாக நடைமுறைப்படுத்தி அதன் நோக்கங்களை அடைய முடியும். இதன் தீமை யாதெனில் அரசு ஒரு குறிப்பிட்ட ரீதியான முன்னுரிமையை அனுபவித்து போட்டியின்மையால் அரசுக்கு சொந்தமான உற்பத்தி அலகின் உற்பத்தித் திறனை பரிசோதிக்க கடினமான நிலையை உருவாக்குகிறது.

## தூண்டும் திட்டம் (Planning by Inducement)

இது கலப்புப் பொருளாதாரம் கொண்ட குடியரசு நாடுகளில் (இந்தியா) காணப்படுகிறது. இதில் அரசு தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனியார் துறைகளுக்கு வரிச் சலுகைகள் மற்றும் பிற ஊக்கங்களை அளித்து தனியார் துறையை தூண்டி விட வேண்டும். எனினும் மக்களாட்சி திட்டமிடுதலில் பொது மக்களுக்கு தங்கள் கருத்தை வெளியிட வாய்ப்பு கிடைத்தாலும் அரசு பின்பற்றும் மக்களாட்சி நிர்வாக முறையில் ஏற்படும் கால தாமதங்களால் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் நோக்கங்களை அடைவதிலும் மிகவும் வேகமற்ற நிலை காணப்படுகிறது.

## சுட்டிக்காட்டும் திட்டம் (Indicative planning)

இத்தகைய திட்டத்தில் அரசு தொழில் முனைவோருடன் முன்னதாகவே கலந்தாலோசிக்க, வரவேற்று தனது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்து அவர்களுடன் ஆலோசித்து முடிவெடுக்கும். இதற்கு சிறந்த உதாரணம் பிரான்சு அரசின் சுட்டிக் காட்டும் திட்டமாகும். 1991 ஆம் ஆண்டிற்கு பிறகு தாராளமயமாதல் மற்றும் தனியார்மயமாதல் கொள்கைகள் பின்பற்ற தொடங்கிய பின்பு இந்திய திட்டமிடுதலும் கூட ஒரு வகையில் சுட்டிக் காட்டும் திட்டமாகவே மாறியது.

## சுழல் திட்டம் (Rolling planning)

ஒவ்வொரு வருடமும் திட்டத்தின் நடைமுறை மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அடுத்த வருட திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் மாதிரி 1978-80களில் ஜனதா அரசால் (மொரார்ஜி தேசாய்) கொண்டுவரப்பட்டது. இதன் மூலமாக விவசாய மற்றும் அதன் தொடர்பான துறைகளின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழிற்சாலைகளை பெருக்கவும் குறைந்த வருமானம் பெறும் வகுப்பினரை குறைந்தபட்ச தேவையை அடைய வைக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## பொருளாதாரத் திட்டமிடுதலின் வகைகள்

- குறுகிய காலத் திட்டம் - ஓராண்டு திட்டங்கள் - 1 ஆண்டு
- நடுப்பருவத் திட்டம் - 5 ஆண்டுகள்
- தொலைநோக்குத் திட்டம் - 20 முதல் 25 ஆண்டுகள்

## இந்தியாவில் திட்டமிடுதலின் வரலாறு

- 1934 ஆம் ஆண்டு மைசூரின் திவான் விஸ்வேஸ்வரய்யாவின் 'திட்டமிட்டப் பொருளாதாரம்" (The planned economy) என்ற நூல் வெளியிடப்பட்டது.
- 1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸால் நேருவின் தலைமையில் 'இந்திய திட்ட ஆணையம்" (தேசியத் திட்ட ஆணையம்) அமைக்கப்பட்டது.
- 1944 ஆம் ஆண்டு 'பாம்பே திட்டம்" வெளியிடப்பட்டது. (பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டம்)
- 1945-ல் M.N. ராயின் 'மக்கள் திட்டம்" வெளியானது. விவசாயம் மற்றும் தொழில்துறைக்கு முக்கியத்துவம் அளித்தார்.
- 1946-ல் S.N.அகர்வால் நாராயணன் அவர்களால் "காந்தியத் திட்டம்" வெளியிடப்பட்டது. இதன் நோக்கம் ஒட்டுமொத்த இந்தியாவின் மூலதனம் மற்றும் கலாச்சார நிலையினை உயர்த்துதல், கிராமப்புறத் தொழில் மற்றும் குடிசைத் தொழில், கதர் தொழிலுக்கு முக்கியத்துவம்.
- 1950-ல் சர்வோதயத் திட்டத்தை J.P. நாராயணன் வெளியிட்டார்.

## இந்தியாவில் திட்டமிடுதலின் நோக்கங்கள்

- நாட்டு வருமானத்தை உயர்த்துதல்.
- குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட நிலையில் முதலீட்டை உயர்த்துதல்.
- வருமான மற்றும் செல்வப் பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதோடு பொருளாதார,சக்தி வளங்களின் மீது குவிதலைக் கட்டுப்படுத்துதல்.
- வேலைவாய்ப்புகளை விரிவாக்குதல். வேளாண்மை, உற்பத்தித் தொழிற்சாலை (குறிப்பாக மூலதனப் பொருட்கள்) மற்றும் வாணிப செலுத்து சமனிலை ஆகியவற்றின் வளர்ச்சித் தடைகளை அகற்றுதல்.
- வேளாண் உற்பத்தி திறனை அதிகரித்தல் மற்றும் தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைதல். அடிப்படை மற்றும் கனரக தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல், அயல் நாட்டு வாணிப சந்தையில் சாதகமான அயல்நாட்டு செலுத்து சமநிலைக்கும் முன்னுரிமை அளித்தல் ஆகியன இந்தியத் திட்டமிடலின் முக்கிய நோக்கங்களாக இருந்தது.

| திட்டம் | மாதிரி | நிகழ்வுகள் | இலக்கு | அடைவு |
|---|---|---|---|---|
| **முதல் ஐந்தாண்டு திட்டம்** (1951 - 1956) | **ஹரார்டு டோமா மாதிரி திட்டம்** | • முன்னுரிமை வேளாண்மை வளர்ச்சி (நீர்மின் திட்டம், நீர்ப்பாசன வசதிகளை பெருக்குதல்).<br>• திட்டம் வெற்றியடைந்தது சமுதாய முன்னேற்ற திட்டம், குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டம் 1952ல் தொடங்கப்பட்டது. | 2.1 | 3.6 |
| **இரண்டாம் ஐந்தாண்டு திட்டம்**: (1956 - 1961) | **மஹல னோபிஸ் மாதிரி** | • முன்னுரிமை, அடிப்படை மற்றும் கனரக தொழில்கள் வளர்ச்சி.<br>• பிலாய், துர்காபூர், ரூர்கேலா இரும்பு எஃகு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன.<br>• பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது | 4.5 | 4.0 |
| **மூன்றாம் ஐந்தாண்டு திட்டம்**: (1961 - 1966) | மஹலனோபிஸ், சக்கரவர்த்தி | • முன்னுரிமை பெரும் இயந்திரங்களை நம் நாட்டிலேயே உருவாக்குதல்<br>• வேளாண்மையில் சுய தேவையைப் பூர்த்தி செய்தல்.<br>• பாகிஸ்தான், சீனாவுடன் போர் மற்றும் பருவக்காற்று பொய்த்ததால் வறட்சி காரணமாக தோல்வி அடைந்து.<br>• தானியங்களை பாதுகாப்போம் என்ற திட்டம் தொடங்கப் பட்டது - 1965.<br>• பசுமை புரட்சி அறிமுகம் செய்யப்பட்டது (1965) | 5.6 | 2.2 |
| **மூன்று ஓராண்டு திட்டங்கள்** (1966 - 1969) | லெண்டிப் | • இந்தியாவின் முதல் ஓராண்டுத் திட்டம்.<br>• பொருளாதார நிபுணர்கள் இதனைத் திட்ட விடுமுறைக் காலம் என அழைக்கின்றனர்.<br>• 1966 - 67 இல் இந்தியாவில் பசுமைப் புரட்சியை அறிமுகப்படுத்தினர்.<br>• 1966 ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதால் ஏற்றுமதி அதிகரித்து, இறக்குமதி குறைந்தது<br>• விலைவாசி குறைந்தது<br>• பசுமைபுரட்சி செயல்படுத்தப்பட்டது | | |
| **நான்காம் ஐந்தாண்டு திட்டம்**: (1969 - 1974) | ஆலன் மனோ, அசோக் ருத்ரா | • தற்சார்பு அடைதல், ஏற்றுமதி அதிகரித்தல்.<br>• சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி<br>• விஜய நகரம், சேலம், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் இரும்பு எஃகு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. | 5.7 | 3.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம்**: (1974 - 1979) | D.D. தார் | • வறுமையை ஒழித்தல்<br>• ஓராண்டு முன்னதாகவே 1978ல் ஜனதா அரசால் நிறுத்தப்பட்டது<br>• 20 அம்சத் திட்டம் (1975) அறிமுகம் செய்யப்பட்டது.<br>• கரிபி ஹட்டோ ( முழக்கம் )<br>• தேசிய குறைந்தபட்சத் தேவை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>• சுழல் திட்டம் (1978 - 80) Rolling Plan<br>• TRYSEM - 1979 தேசிய கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டது. | 4.4 | 5.2 |
| **சுழல் திட்டம்** (1978 - 1979) | | • அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் அறிமுகப்படுத்தியது.<br>• மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சிறிய குடும்பம் என்ற கொள்கை பின்பற்றப்பட்டது.<br>• சிறு தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்தனர். | | |
| **ஆறாம் ஐந்தாண்டு திட்டம்**: (1980 - 1985) | | • ஏழ்மையை போக்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.<br>• தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம்.<br>• ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம். | 5.2 | 5.2 |
| **ஏழாம் ஐந்தாண்டு திட்டம்**: (1985 - 1990) | | • வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்.<br>• ஜவஹர் ரோஜ்கார் யோஜனா (1989)<br>• வேலைக்கு உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.<br>• ஓராண்டுத் திட்டங்கள் (1990 - 1992) | 5.0 | 5.8 |
| **எட்டாம் ஐந்தாண்டு திட்டம்**: (1992 - 1997). | ஜான் மில்லர் | • நோக்கம்:<br>1.மனித வள மேம்பாடு.<br>2.மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துதல்.<br>• மொத்த உள்நாட்டு உற்பத்தி, இலக்கை விட மிஞ்சியது.<br>• தாராளமயமாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை செயல்படுத்தப்பட்டது. | 5.6 | 6.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டம்**: (1997 - 2002) | | • சமுதாய நீதி மற்றும் சமத்துவத்துடன் கூடிய வளர்ச்சி.<br>• மக்கள் பங்கு பெறும் அமைப்புகளை (மகளிர் சுய உதவிக் குழு, கூட்டுறவுச் சங்கங்கள்) முன்னேறச் செய்தல். | 6.5 | 5.4 |
| **பத்தாவது ஐந்தாண்டு திட்டம்**: (2002 - 2007). | | • எட்டு சதவீதம் வளர்ச்சியை எட்டுதல்.<br>• ஓராண்டுக்கு 10 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.<br>• அனைவருக்கும் கல்வி அளித்தல்.<br>• புதுப்பிக்கப்பட்ட 20 அம்ச திட்டம் தொடங்கப்பட்டது. | 7.9 | 7.7 |
| **பதினோறாவது ஐந்தாண்டு திட்டம்**: (2007 - 2012) | | • வேளாண்மை வளர்ச்சி விகிதத்தை 4% ஆக உயர்த்துதல்.<br>• 70 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.<br>• குழந்தை இறப்பு விகிதம் 1/1000 மாக குறைத்தல்.<br>• காடுகளின் சதவீதம் 5% ஆக உயர்த்ததுதல்.<br>• அனைவருக்கும் சுத்தமான குடிநீர் அளித்தல். | 9.0 | 7.9 |
| **பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்** (2012 - 2017) | | • Vision of Rapid Sustainable More Inclusive Growth என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்டது.<br>• 88,000 MW மின் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. | 9.0 | |

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : தமிழகத்தின் பொருளாதாரப் போக்குகள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழகத்தின் பொருளாதாரப் போக்குகள்

## தமிழகத்தின் உற்பத்தித் தொழிற்சாலைகள்

- இரண்டாம் நிலைத் தொழிலான உற்பத்தித் தொழில் தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் தொழிலாகும்.
- மஹாராஷ்டிரா, குஜராத்தை அடுத்து தமிழகம் தொழில் வளர்ச்சியில் மூன்றாம் இடத்தை வகிக்கின்றது.
- மூலப்பொருட்களை ஒரு முழுமையான பயன்பாடு பொருளாக மாற்றும் செயலினை உற்பத்தி என்கிறோம். தனித்த உற்பத்தித் தொழிற்சாலை தொழிற்கூடம் என அழைக்கப்படுகிறது.
- ஒரே விதமான பொருட்களை உற்பத்தி செய்யும் பல தொழிற்கூடங்கள் ஓர் பரந்த நிலப்பரப்பில் அமையுமானால் அவை தொழிற்சாலைகள் என அழைக்கப்படுகிறது.
- மாநிலத்தில் மொத்த வருமானத்தில் 24 விழுக்காடு தொழில்துறையின் மூலம் கிடைக்கிறது.

## தமிழ்நாட்டின் முக்கியத் தொழிற்சாலைகளின் பரவல்

- நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள், காகித உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி. சிமெண்ட் மின் உபகரணங்கள், மோட்டார் வாகனம் , தகவல் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுலா ஆகியவை தமிழ் நாட்டின் முக்கியத் தொழில் துறைகளாகும்.

## நெசவுத் தொழிற்சாலை

- இந்திய நெசவுத் தொழில் துறையில் பருத்தி இழை உற்பத்தி, நெசவுத் துணி, உள்ளாடை மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தியில் தமிழ்நாடு பெரும் பங்கு வகிக்கின்றது.
- பருத்தி நூல், இழை மற்றும் துணி உற்பத்தியில் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 25 விழுக்காடு தமிழகத்தின் பங்களிப்பாகும். கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருப்பூர், காரமடை, ஈரோடு, பவானி, திண்டுக்கல், திருமங்கலம், மதுரை, பாளையங்கோட்டை, பாபநாசம், மற்றும் தேனி ஆகியவை நெசவுத் தொழிலின் மையப்பகுதிகளாகும்.
- கோயம்புத்தூர் மண்டலம் மிகப்பெரிய அளவில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் இதனை **"தென் இந்தியாவின் மான்செஸ்டர்"** என்று அழைக்கப்படுகின்றது.
- திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்கள் நெசவுத் தொழிலின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிப்பதால், இப்பகுதி தமிழ் நாட்டின் **"நெசவுப் பள்ளத்தாக்கு"** என்று அழைக்கப்படுகிறது. இவற்றுள் திருப்பூர் தமிழ் நாட்டின் 70 சதவீதம் உள்ளாடைகளை ஏற்றுமதி செய்கிறது.
- ஆடை மற்றும் படுக்கை விரிப்புகளின் உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முன்னிலை வகிக்கிறது. பவானியில் உற்பத்தி செய்யப்படும் ஜமுக்காளங்களும் சென்னிமலையில் உற்பத்தி செய்யப்படும் போர்வைகளும் பெரும் புகழ் பெற்றவை.
- தமிழ்நாட்டின் **நெசவுத் தலைநகரம்** என்ற சிறப்புப் பெயரை **கரூர்** நகரம் பெற்றுள்ளது.

## பட்டு நெசவுத் தொழில்

- நாட்டின் பட்டு நெசவுத் தொழில் உற்பத்தியில் தமிழ்நாடு நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் பாரம்பரியம் மிக்க தனித்த நெசவுத் தரத்திற்காக உலகமெங்கிலும் புகழ் பெற்றுள்ளது.
- ஆரணி, இராசிபுரம் மற்றும் திருபுவனம் ஆகியவையும் குறிப்பிடத்தக்க பட்டு நெசவு மையங்களாகும்.
- ஓசூரில் உள்ள பட்டுப் புழு வளர்ப்பு பயிற்சி மையம் விவசாயிகளுக்கு விவசாயத்துடன் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி வழங்குகிறது.
- செயற்கை இழை ஆடை உற்பத்தியில் மேட்டூர், இராமநாதபுரம், மதுரை ஆகிய பகுதிகள் சிறப்புடன் விளங்குகிறது.

## சர்க்கரை ஆலைகள்

- இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 10 சதவீதம் தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது.
- சர்க்கரை ஆலைகளுக்கான சாதகமான காரணிகள் :
  காலநிலை, மண்வளம், பாசனம், போக்குவரத்து. சந்தை, கூட்டுறவு சங்கங்கள்.

## தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்கள்

- சர்க்கரை ஆலைகள்- 45 (கூட்டுறவு சங்கங்கள் - 16, அரசு -3, தனியார் -23)
- கரும்புச் சக்கை - காகித தொழிற்சாலையின் மூலப்பொருள்
- விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்கள் சர்க்கரை ஆலைகள் அதிகமுள்ள மாவட்டங்களாகும்.
- வெல்லம், கல்கண்டு.சர்க்கரை ஆகியவை கரும்பிலிருந்து கிடைக்கும் உற்பத்தி பொருட்களாகும்.
- தமிழக அரசின் முயற்சியால் ஒருங்கிணைந்த சர்க்கரை வளாகங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் எரிசக்தி உற்பத்தி, எத்தனால் மற்றும் திசு வளர் ஆய்வகம், எரிசாராயம் உற்பத்தி, திசு வளர்ப்பு சோதனைக் கூடம், மண் பரிசோதனைக் கூடம், கூட்டு உரம் தயாரித்தல் போன்ற பணிகளை இந்த ஒருங்கிணைந்த மையங்கள் மேற்கொண்டிருக்கின்றன.

## உணவு பதப்படுத்தும் தொழில்

- உணவு பதப்படுத்தும் தொழில் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக வளர்ந்திருக்கிறது. மாம்பழ ரசம் பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- விரைவில் சமைத்து உண்ணும் வகையில் பலவிதமான ஆயத்த வகை உணவுப் பொட்டலங்கள் மற்றும் உணவிற்குத் தேவையான மசாலா பொடிகள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விநியோகிக்கப்படுகிறது.
- நொறுக்கு வகைப் பலகாரங்களும், பிஸ்கட்டுகளும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.
- கடல்சார் பொருட்களும் மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டின் நீண்ட கடற்கரை இதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

## காகிதத் தொழிற்சாலை

- இந்தியாவின் காகித உற்பத்தியில் ஆந்திராவிற்கு அடுத்தபடியாக தமிழகம் இரண்டாம் நிலையில் உள்ளது.
- நாட்டின் 12சதவீதம் காகித உற்பத்தி தமிழ் நாட்டிற்குரியது. மூங்கில், புற்கள், கரும்புச்சக்கை ஆகியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு காகிதம் தயாரிக்கப்படுகிறது.
- காகித உற்பத்திக்கு சோடா, சோடா உப்பு, குளோரின் , கந்தகம், மரக்கூழ், அதிக அளவு தண்ணீர் ஆகியவை இதர தேவைகளாகும்.
- தமிழ்நாட்டின் புக்காத்துறை (காஞ்சிபுரம்) பவானி சாகர், பள்ளிப்பாளையம். புகழூர், பரமத்தி வேலூர் , கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரனமாதேவி ஆகிய இடங்களில் காகித தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.
- **தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் உலக வங்கியின் உதவியுடன் 1979 ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் புகழுருக்கு அருகாமையில் நிறுவப்பட்டது**. ஆண்டுக்கு ஒரு மில்லியன் டன் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்ட காகிதமாகத் தயாரிப்பதில் உலகிலேயே மிகப்பெரிய ஆலையாக **TNPL** திகழ்கிறது.

## சிமெண்ட் தொழிற்சாலை

- இந்தியாவில் முதலில் சென்னையில் (கி.பி.1904) சிமெண்ட் தொழிற்சாலை துவக்கப்பட்டது. அது தோல்வியடைந்தது.
- பின் கி.பி.1914ல் போர்பந்தர் (குஜராத்) என்னுமிடத்தில் துவங்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகள்:

- தாழையூத்து - திருநெல்வேலி
- டால்மியாபுரம் - திருச்சி
- மதுக்கரை - கோவை
- சங்கர் நகர் - சேலம்
- துலுக்கப்பட்டி - விருதுநகர்

## பெட்ரோலிய சுத்தகரிப்பு

| இடம் | மாநிலம் | நிறுவனம் |
|---|---|---|
| டராம்பே | மும்பை | ஹிந்துஸ்தான் நிறுவனம் |
| கௌஹாத்தி, டிக்பாய் | அசாம் | இந்தியன் ஆயில் |
| மணலி | சென்னை | இந்தியன் ஆயில் |
| மதுரா(பெரியது) | உத்திரபிரதேசம் | இந்தியன் ஆயில் |
| ஹால்டியா | கொல்கத்தா | இந்தியன் ஆயில் |

## இரசாயனத் தொழிற்சாலைகள்

- சல்ப்யூரிக் அமிலம், ஹைட்ரோகுளோரிக் அமிலம் தொழிற்சாலைகள் - மகாராஷ்டிரா, குஜராத், மேற்கு வங்காளம், கேரளா, பீகார்
- காஸ்டிக் சோடா, சோடா ஆஷ் - நெய்வேலி, ஹால்டியா, குஜராத்.

## மருந்துத் தொழிற்சாலைகள்

- **இந்திய மருந்தியல் கழகம் - புதுடெல்லி - பென்சிலின்**, ஸ்ட்ரெப்டோமைசின்
- அறுவைசிகிச்சை உபகரணங்கள் ஆலை - சென்னை.
- இந்துஸ்தான் எதிர் உயிரி கழகம் -புனே -பென்சிலின், ரெட்டோமைசின், விட்டமின்-சி.
- பூச்சி கொல்லி மருந்துகள் - புதுடெல்லி (DDT) ஆலவாய் (BHC).
- இந்துஸ்தான் ஆண்டிபயாடிக் - பிம்பிரி.

## பிற தொழிற்சாலைகள்

- அரசு யூரியா உற்பத்தி தொழிற்சாலை - நெய்வேலி
- தனியார் யூரியா உற்பத்தி தொழிற்சாலை - எண்ணூர்
- சணல் ஆலைத் தொழில் - மே.வங்கம் (முதலிடம்), பீகார், உத்திரபிரதேசம், ஆந்திரா
- உரோம ஆடை நெசவுத் தொழில் - பஞ்சாப் (முதலிடம்), ராஜஸ்தான், உத்திரபிரதேசம்.
- ஸ்பிக் யூரியா உற்பத்தி தொழிற்சாலை - தூத்துக்குடி
- பட்டு ஆராய்ச்சி நிறுவனம் : மைசூர் ( கர்நாடகா )
- கரும்பு ஆராய்ச்சி நிலையம் - கோயம்புத்தூர் (தமிழ்நாடு)
- வெண் மருந்து தொழிற்சாலை - அரவங்காடு (தமிழ்நாடு)
- டீசல், மின்சார இரயில் என்ஜின் தயாரிக்கும் தொழிற்சாலை - சித்தரஞ்சன்.(மேற்கு வங்கம்)
- கபூர்தலா, பாட்டியாலா - ரயில் கோச் மற்றும் உதிரி பாகங்கள்
- ஏலக்கனா (கர்நாடகா) - சக்கரம் மற்றும் அச்சுகள்
- வாரணாசி - டீசல் எஞ்சின்கள் (உத்திரப்பிரதேசம்)
- இரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை - பெரம்பூர் (சென்னை).
- முதல் கப்பல் கட்டும் தொழிற்சாலை - சிந்தியா ஸ்டீம் நேவிகேசன், இந்தியாவில் - விசாகப்பட்டினம், கொல்கத்தா, மசகான்டக், கொச்சின்.
- பீரங்கி டாங்கிகள் தயாரிக்கும் தொழிற்சாலை - விஜயந்தா (ஆவடி சென்னை)
- இந்தியாவில் முதல் தொழிற் சங்கம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது.
- இந்தியாவின் மிகப் பெரிய மற்றும் பழையத் தொழில் நெசவுத் தொழில்.
- இந்தியாவின் மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனம் - இந்தியன் ரயில்வே.

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : நிலச்சீர்த்திருத்தம் மற்றும் வேளாண்மை**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# நிலச்சீர்த்திருத்தம் மற்றும் வேளாண்மை

## நிலச்சீர்த்திருத்தம்

- நிலச்சீர்த்திருத்த நடவடிக்கைகள் 1950-களில் தொடங்கப்பட்டது.
- பிரிட்டிஷ் ஆட்சியில் நில உடைமை முறை செயல்பட்டு வந்தது.
- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிலவருவாய் நிர்வாகம் ஜமீன்தாரி முறை, ரயத்துவாரி முறை, மகல்வாரி முறை என மூன்று முறைகளில் அமைந்திருந்தது.
- இந்தியாவின் மொத்த விவசாய நிலத்தில் 5 சதவீதம் ஜமீன்தாரி முறையின்கீழ் அமைந்திருந்தது.
- ஜமீன்தாரி முறையில் ஜமீன்தார் தனது கட்டுப்பாட்டில் உள்ள நிலத்திற்கு, குறிப்பிட்ட தொகையை பிரிட்டிஷ் அரசுக்கு வருவாயாக செலுத்தி விட வேண்டும். பதிலாக ஜமீன்தார்கள் அந்நிலங்களை குத்தகைக்கு விட்டு, முடிந்த அளவு வருவாய் ஈட்டிக் கொள்ளலாம்.
- மெட்ராஸ்,பாம்பே மாகாணங்களிலும், அஸ்ஸாமிலும் ரயத்துவாரி முறை அமலில் இருந்தது.
- இந்தியாவின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 38 சதவீதம் ரயத்துவாரி முறைப்படி நிர்வகிக்கப்பட்டது. ரயத்துவாரி முறையில் பயிரிடும் விளைநிலம் நேரிடையாகப் பயிரிடுவோரிடம் ஒப்படைக்கப்பட்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அவர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகையைக் கணக்கிட்டு வசூலிக்கப்படும்.
- மெட்ராஸ் மாகாணத்தில் 1820-ம் ஆண்டில் தாமஸ் மன்றோவால் ரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தியாவின் வடமேற்கு பகுதியிலும், பஞ்சாபிலும் மகல்வாரி முறை வழக்கத்தில் இருந்தது.
- இந்தியாவின் மொத்த விளை நிலத்தில் 5 சதவீதம் நிலம் மகல்வாரி முறையின் கீழிருந்தாகக் கூறப்படுகிறது.
- மேற்கண்ட மூன்று முறைகளுமே பயிரிடுவோர்களைக் சுரண்டும் விதத்தில் இருந்ததால் சுதந்திரத்திற்கும் பின் இதைச் சரி செய்யும் வகையில் நிலச்சீர்த்திருத்த முறை கொண்டு வரப்பட்டது.

## நிலக் குத்தகைச் சீர்த்திருத்தச் சட்டங்கள்.

குத்தகையாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கவும், நியாயமான வகையில் வாரத்தை நிர்ணயிக்கவும், பெரிய நிலக்கிழார்களின் நிலத்தைச் சாகுபடியாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. விவசாயக் கூலியாட்களுக்கு குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயித்தும் சட்டங்கள் இயற்றப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக தமிழகத்தில் ராஜாஜி கொண்டுவந்த தஞ்சாவூர் பண்ணையாட்கள் சட்டத்தையும், காமராஜர் நிறைவேற்றிய நியாயக் குத்தகை சட்டத்தையும் குறிப்பிடலாம். இவற்றின்படி

விளைச்சலில்60 பங்கு நிலத்தில் பாடுபட்டவர்களுக்கும் , 40 பங்கு நில உடைமையாளர்களுக்கும் கிடைக்கும். இப்பொழுது தமிழக அரசு நிலமற்றவர்களுக்கும் புறம்போக்கு நிலத்தை வழங்க நடவடிக்கைகள் எடுக்கின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் நிலக்குத்தகையை மேலும் நெறிப்படுத்த முயன்றனர். நான்காம் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் கீழ்க்கண்ட நிலக்குத்தகை சீர்த்திருத்தங்களை கொண்டுவரப் போவதாகத் திட்டத்தின் அறிக்கை கூறியது.

1. குத்தகை நிலங்களைத் திரும்பப் பெறமுடியாமல் நிலையாக குத்தகைக்கு விடச் செய்வது.
2. குத்தகையாளர்கள் தங்களது நிலத்தை விரும்பி திரும்பக் கொடுக்கின்ற பொழுது நிலவுடைமையாளர்கள் அவற்றை வேறு யாருக்காவது ஒதுக்க வேண்டும்.
3. பண்ணைகளிலேயே வீடுகட்டி வாழும் குத்தகையாளர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும்.
4. துணைக் குத்தகையாளர்களுக்கும் குத்தகைப் பாதுகாப்புச் சட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
5. தவறான முறையில் குத்தகையாளர்களை வெளியேற்றுகின்றவர்களுக்குத் தண்டணை வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்த தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை பதிவு வைப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் இப்போது தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குத்தகைகாரார்கள் தங்கள் பெயர் மற்றும் விவரங்களை பதிவு செய்வர். இதற்கென அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தை மற்றைய மாவட்டங்களிலும் செயல்படுத்த முடிவு செய்தனர்.

## சட்டங்களும் முன்னேற்றமும்

பல மாநிலங்கள் நில உச்ச வரம்புச் சட்டத்தை இயற்றிச் செயல்படுத்துகின்றனர். இதுவரை 20 இலட்சம் ஏக்கர் நிலத்தை உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் பெற்று மாநில அரசுகள் பகிர்ந்துள்ளன. மேற்கு வங்காளத்தில் 7.77 இலட்சம் ஏக்கரும், ஜம்முகாஷ்மீரில் 45 இலட்சம் ஏக்கரும், பஞ்சாபில் 3.69 இலட்சம் ஏக்கரும் , உத்தரபிரதேசத்தில் 2.23 இலட்சம் ஏக்கரும் , மகாராஷ்ரடிரத்தில் 1.63 இலட்சம் ஏக்கரும் , மத்தியப் பிரதேசத்தில் 67,700 இலட்சம் ஏக்கரும் குஜராத்தில் 39,000 இலட்சம் ஏக்கரும் , அஸ்ஸாமில் 34,000 இலட்சம் ஏக்கரும் தமிழகத்தில் 20,000 இலட்சம் ஏக்கரும், உச்சவரம்பு சட்டத்தின் மூலம் பெறப்பட்டது.

நில உச்சவரம்புச் சட்டத்தால் எதிர்பார்த்த பலன் விளையவில்லை. இதற்கு அடிப்படையான காரணம், டேனியல் கார்னர் கூறுவதைப் போல நிலஉச்சவரம்புச் சட்டங்களை இயற்றுவதிலும், செயல்படுத்துவதிலும் ஏற்பட்ட காலதாமதாகும். சட்டங்கள் வருவதைப் பற்றி மிகுதியாக பேசப் பெற்றது. பெரிய நிலக்கிழார்கள் எச்சரிக்கையாக தங்களிடமிருந்த மிகுதியான நிலத்தைப் பிரித்து உறவினர்களின் பெயரில் எழுதி வைத்தோ, வேறுமுறைகளின் மூலமோ, சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி விட்டனர். சட்டங்களை செயல்படுத்துவதில் அரசு திறமையோடும், தீவிரமாகவும் நடந்து கொண்டிருந்தால் மிகுந்த பலன் விளைந்திருக்கும்.

## வேளாண்மை

- தமிழ்நாட்டின் முக்கிய உணவுப் பயிர்கள் நெல், சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு ஆகும்.
- தமிழ்நாட்டின் முக்கிய வணிகப் பயிர்கள் கரும்பு, பருத்தி, சூரியகாந்தி, தேங்காய், முந்திரி, எள் மற்றும் நிலக்கடலை ஆகும்.
- முக்கிய தோட்டப் பயிர்கள் காப்பி, தேயிலை, ஏலக்காய் மற்றும் இரப்பர் ஆகும்.
- தமிழ்நாட்டின் வேளாண் உற்பத்தி நிலச்சீர்த்திருத்தம் மற்றும் புதிய வேளாண் முறைகளினாலும் அதிகரித்து வருகிறது.

### பசுமைப் புரட்சி - 1966-67

- இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை எம்.எஸ். சுவாமிநாதன்.
- உலக பசுமைப் புரட்சியின் தந்தை நார்மன் போர்லாக்.
- பசுமைப்புரட்சி என்ற சொல்லை உருவாக்கியவர் வில்லியம் காய்டு.
- 1966-67-ம் ஆண்டு இந்தியாவில் பசுமைப் புரட்சி அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்மூலம் வேளாண்மைத் துறையில் புதிய தொழில்நுட்பங்களும்இரசாயனஉரங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிக மகசூல் தரும் விதைகள் பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம் வேளாண் உற்பத்தி அதிகரித்தது. பசுமைப் புரட்சியின் முக்கிய நோக்கம் உற்பத்தியைப் பெருக்குவதாகவே அமைந்தது.
- பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இரண்டாவது பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

### <u>இதன் முக்கிய நோக்கங்கள்.</u>

- ஆண்டு வளர்ச்சியை 4 சதவீதம் உயர்த்துதல்.
- பாசன வசதி பெற்ற பகுதிகளில் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்துதல்.
- நீர் மேலாண்மையை அதிகரித்தல்.
- மழைநீர் சேகரிப்பு.
- மண்வளத்தில் கவனம் செலுத்துதல்.
- அங்காடி செயல்பாடுகளை அதிகரித்தல்.
- நில சீர்த்திருத்தத்தில் கவனம் செலுத்துதல் முதலியன.

## <u>பசுமைப் புரட்சியின் முன்னோடித் திட்டங்கள்</u>

### <u>தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம்</u> (IADP)

இது 1960-61-ல் நாட்டிலுள்ள சில பகுதிகளை தேர்ந்தெடுத்து தரமான விதைகள், பாசன வசதி, பயிர்கடன், சாகுபடி கடன் போன்றவை வழங்கப்பட்டன.

## <u>தீவிர வேளாண்மை பகுதித் திட்டம்</u> (IAAP)

- 1964-65-ல் அறிமுகப்படுத்தப்பட்டு தீவிர அறுவடை முறைகளை செயல்படுத்தியது.
- 1965-66, 1966-67 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பசுமை புரட்சி திட்டம் உடனடியாக செயல்படுத்தப்பட்டது.

## பசுமைப் புரட்சியின் குறைபாடுகள்

- மண்வளம் பாதிப்பு
- நீர்வளம் குறைத்தல்
- அதிக இரசாயன உரப்பயன்பாட்டினால் சுற்றுச்சூழல் பாதிப்பு அடைந்தது
- உணவு தானியங்கள் தவிர, பிற வேளாண்மை பயிர்கள் முக்கியத்துவம் பெறவில்லை

## இரண்டாம் பசுமைப் புரட்சி

- 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டது.
- முதலாம் பசுமைப் புரட்சியில் இருந்து இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு மாற்றம் கொண்டு வர இரண்டு காரணங்களை அறிவுறுத்தினர்.
- முதல் காரணம்- உலர்நில சாகுபடி பயனடையவில்லை.
- இரண்டாவது காரணம்- அது நடுநிலை அளவுள்ளதாக இல்லை. பெரும் பண்ணைகளுக்கும், பெரும் பண்ணையாளர்களுக்கும் மட்டுமே பயன்தரத்தக்கதாக அமைந்தது.
- இப்பசுமைப் புரட்சி
  கரிம விவசாயம்
  பசுமை விவசாயம்
  உயிர்வள ஆய்வு விவசாயம்
  நுண்ணிய விவசாயம்
  வெள்ளை விவசாயம்
  ஒரு வைக்கோல் புரட்சி என அமைந்தது.
- முதல் பசுமைப்புரட்சியில் உணவுத்தானியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- இரண்டாவது பசுமைப் புரட்சியில் அனைத்து வேளாண்மைப் பொருட்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- பணப்பயிர்கள், நறுமணப் பயிர்கள், நறுமணப் பொருட்கள், வேளாண்மை சார்ந்த வருவாய் இனங்களான ஆட்டுப்பண்ணை, பால் பண்ணை, கோழிப் பண்ணை, பன்றிப் பண்ணை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

## தேசிய விவசாயக் கொள்கை 2000

- இது விலைப்பாதுகாப்பு அளிப்பதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. விவசாயிகள் இதனால் உற்பத்தி செய்ய ஊக்கம் பெறுவார்கள். ஆனால், இறக்குமதி செய்யப்படும் அளவில் இருந்த சில தடைகளையும் நீக்கியுள்ளது.

- புதிய வேளாண்மைப் புரட்சி ''வானவில்புரட்சி'' என்றும் அழைக்கப்படுகிறது. அது கீழ்கண்ட புரட்சிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வேளாண்மை உற்பத்தி திறனை நிலம் (ம) உழைப்பின் உற்பத்தித் திறனை கொண்டு அளவிடலாம்.

## வானவில் புரட்சி

- பச்சை - உணவுத் தானியங்கள்
- வெள்ளை - பால் (கால்நடை வளர்ப்பு)
- மஞ்சள் - எண்ணெய் வித்துக்கள்
- நீலம் - மீன்உற்பத்தி, மீனவர்நலம், சுத்தமான நீர்
- சிகப்பு - இறைச்சி
- தங்க நிறம்- பழவகைகள், தேன், தோட்டப் பயிர்கள்.
- வெள்ளி - முட்டை, கோழி வளர்ப்பு
- சாம்பல்நிறம் - உரம்
- கருப்பு - மரபு சாரா எரிசக்தி (பெட்ரோல், நிலக்கரி)
- பழுப்பு - தோல் உற்பத்தி
- காவி - சூரியகாந்தி
- நார் - பருத்தி
- தங்கஇலை - சணல்
- இளங்சிகப்பு - இறால் வளர்ச்சி, வெங்காயம்
- வட்டம் - உருளைக் கிழங்கு
- வானவில் புரட்சி என்பது உணவுச் சங்கிலி புரட்சியை உள்ளடக்கியது.
- உணவுச் சங்கிலிப் புரட்சி என்பது உணவுத் தானியங்கள் காய்கறிகள், பழங்கள் வீணாகாமல் தடுப்பது.

## உணவுப் பாதுகாப்பு (2007)

- 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலக வங்கி அறிக்கை (1986) உணவுப் பாதுகாப்பை பின்வருமாறு வரையறை செய்கிறது. "எல்லா மக்களும், எல்லா நேரத்திலும், போதுமான உணவைப் பெற்று ஆரோக்கியமாக வாழ்வது."
- உணவு (ம) வேளாண்மை அமைப்பு (1983), பின்வருமாறு உணவு பாதுகாப்பை வரையறை செய்கிறது. "அனைத்து மக்களும் அனைத்து நேரங்களிலும் அவர்களின் தேவைக்கேற்ற உணவுப் பொருளைப் பெறவும், அதற்குப் போதுமான பொருளாதாரத்தைப் பெறவும் உறுதி அளிப்பது""."
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாடு உணவுத் தன்னிறைவை அடையலாம். ஆனால் உணவுப் பாதுகாப்புக் கருத்து, நீண்ட பருவ அடிப்படையில், நம்பத்தகுந்த முறையில், போதுமான சத்துள்ள உணவை அனைவருக்கும் கிடைக்க செய்வது.

## உணவுப் பாதுகாப்பு மசோதா

- 22.12.2011 அன்று, அப்போதைய வேளாண் மற்றும் உணவுத்துறை அமைச்சர் கே.வி. தாமஸ், மக்களவையில் உணவுப் பாதுகாப்பு மசோதாவை தாக்கல் செய்தார்.
- தனிநபருக்கு அரிசி கிலோ 1 ரூபாய்க்கும், கோதுமை கிலோ 2 ரூபாய்க்கும் வழங்க உத்தரவாதம் அளிக்கப்பட்டது. 2013 - இல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

## இராஷ்டிரிய கிரிஸி விகாஸ் யோஜனா - 2007-08
**( NATIONAL AGRICULTURAL DEVELOPMENT PROGRAMME )**

- 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- வடகிழக்கு மாகாணங்களில் பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- காய்கறி உற்பத்தி மையங்கள் ஏற்படுத்துதல்.

## கிரிஸி கல்யாண் திட்டம்

- விவசாயம் முன்னேற்றம் (ம) விவசாயிகளின் நலன் காத்தல்.
- இத்திட்டத்திற்காக சேவை வரியை 0.5% 1.6.2016 அன்று மத்திய அரசு உயர்த்தியது.

## விற்பனைக்குரிய உபரி

- வேளாண் அங்காடி என்பதே விற்பனைக்குரிய உபரியின் அமைப்பாகும்.
- உழவர்கள் தங்கள் சொந்த தேவைக்கும், கால்நடைத் தேவைக்கும் போக எஞ்சிய பகுதியே விற்பனைக்கு உரிய பகுதியாகும்.
- (பழைய இருப்பு + நடப்பு உற்பத்தி) - (நுகர்வு + அடுத்த பருவத்திற்கான விதை) = விற்பனைக்குரிய உபரி.
- விற்பனைக்குரிய உபரி என்பது வேளாண்மையின் மொத்த உபரி ஆகும்.
- விற்பனை செய்யப்பட்ட உபரி என்பது வேளாண்மையின் நிகர உபரியாகும்.
- விற்பனைக்குரிய உபரி குறைந்தால் உணவுப் பண்டங்களின் விலை உயரும்.
- 1937- பர்மா - இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட போதும், 1947-ல் இந்தியாவில் மிகப்பெரிய வேலையின்மை, உணவுப் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டது.

## வேளாண்மையில் அறிவியலின் பங்கு

- வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக அதிக விளைச்சல் தரும் புதிய வகை விதைகளும், நோய் எதிர்ப்பு சக்தி பெற்ற பயிர்வகைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவில் பசுமைப் புரட்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தவை புதிய குட்டை ரக கோதுமை இனங்களான கல்யான் (ம) சோனா ஆகும்.
- **Boleworm** எனும் புழுத்தாக்குதலுக்கு எதிர்ப்பு சக்தி கொண்ட **BT** பருத்தி என்றும் புதுரகப் பருத்தி, மரபணு மாற்ற தொழில்நுட்ப முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- குறைந்த நீரை வைத்து நிறைவான பாசன வசதி அளிக்கும் சொட்டுநீர்ப் பாசனம், நுண்நீர்ப் பாசனம் போன்ற அதிநவீன அறிவியல் நீர்ப்பாசன முறைகள் வேளாண் உற்பத்தி வளர்ச்சிக்கு உதவுகின்றன. ரைசோபியம், வேம்பூஞ்சை, நீலப்பசும் பாசி போன்ற உயிரி உரங்கள் வேளாண்மையில் நிலைத்த நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த பெரிதும் உதவுகின்றன.
- நிலத்தை உழுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளில் நவீன அறிவியல் இயந்திரங்களின் பயன்பாடு வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றது.

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : திட்டக்குழு**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# திட்டக்குழு

- திட்டக்குழு என்பது தன்னாட்சி அமைப்பு, ஆலோசனை அமைப்பு.
- இது மத்திய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தொடங்கப்பட்ட அரசியல் சட்டம் சாரா அமைப்பு.
- 1950 - மார்ச் 15 ஆம் நாள் திட்டக்குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு இந்தியாவின் எதிர்கால குறிக்கோள்களை ஐந்தாண்டுக்கு ஒருமுறை தீர்மானிக்கும் வகையில் விரிவான திட்டத்தை உருவாக்கும். **இந்தியப் பிரதமர் திட்டக்குழுவின் தலைவராவார்.**
- **திட்டக்குழுவின் முதல் தலைவர் ஜவர்ஹலால் நேரு. துணைத்துலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார். இவரே குழுவின் உண்மையான நிருவாகத் தலைவராவார்.**
- அவரே ஐந்தாண்டு திட்ட வரைவு அறிக்கையை உருவாக்குவதற்கும் அதை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்புடையவராவார். இவர் கேபினட்டால் நியமிக்கப்படுகிறார். ஆனால் இவர் கேபினட்டிலும் உறுப்பினர் இல்லை. அதன் கூட்டங்களில் வாக்குரிமை ஏதுமின்றி கலந்து கொள்ளலாம்.
- **திட்டக் குழுவின் முதல் துணைத் தலைவர் குல்சாரிலால் நந்தா.**
- **கடைசி துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா.**
- திட்ட அமைச்சரும், நிதி அமைச்சரும் தம் பதவி வழி உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.
- மற்ற சில அமைச்சர்கள் பகுதி நேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.
- நாட்டின் வளங்களை மதிப்பீடு செய்தல், திட்டங்களை உருவாக்குதல், திட்டங்களின் முன்னுரிமைக்கு ஏற்ப வளங்களை பகிர்ந்தளிக்க தீர்மானித்தல் ஆகியன திட்டக் குழுவின் முக்கிய பணிகள்.
- ஒவ்வொரு மாநிலமும் ஒரு மாநிலத் திட்டக்குழுவை கொண்டிருக்கும்.
- **மாநில முதலமைச்சர் மாநிலத் திட்டக்குழுவின் தலைவராவார்.**

## நிதி ஆயோக்

- **ஜனவரி 1, 2015 அன்று தொடங்கப்பட்டது. தொடங்கியவர் நரேந்திர மோடி.**
- மத்திய அரசு 64 ஆண்டுகளாக செயல் பாட்டில் இருந்து வந்த திட்டக்குழுவிற்கு நிதி ஆயோக் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
- NITI என்பதன் பொருள் National Institute for Transforming India. இவ்வமைப்பு செயல்பாட்டில் இருந்து வரும் திட்டக்குழுவினை மறுசீரமைப்பதற்கான முதற்படி ஆகும்.

## அமைப்பு

- தலைவர் - பிரதமர் (பதவி வழி உறுப்பினர்)
- ஆட்சி மன்றம் - அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள்/ யூனியன் பிரதேச ஆளுநர்கள்
- பிராந்திய சபை - அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள்/ யூனியன் பிரதேச ஆளுநர்கள்

- முழு நேர உறுப்பினர்கள்
- பகுதி நேர உறுப்பினர்கள்
- செயலகம் - தேவைப்பட்டால் அமைத்துக் கொள்ளலாம்.
- முதல் துணை தலைவர் - அரவிந்த் பனகாரியா
- தற்போதைய துணைத்தலைவர் - ராஜீவ் குமார்
- முதல் முதன்மை செயல் அலுவலர் சிந்து ஸ்ரீ குல்லார்
- முதல் கூட்டம் நடைபெற்ற நாள் 08.02.2015.

## நோக்கம்

- தேசிய மேம்பாட்டிற்கான முன்னுரிமை அளித்தலில் ஒன்றுபட்ட தொலை நோக்கினை உருவாக்குதல்.
- ஒருங்கிணைந்த கூட்டாட்சித் தத்துவத்தினை ஊக்குவித்தல்.
- கிராமப்புறங்கள் வரை அரசாங்கத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் சென்றடையும் அளவில் செயல்பாட்டு வழிமுறைகளை வகுத்தல்
- தொழில்நுட்ப மேம்பாட்டின் மீது அதிக கவனம் செலுத்துதல்.

## முக்கியச் செயல்பாடுகள்

- இந்த அமைப்பு அரசினுடைய ‘சிந்தனைக் களஞ்சியமாக” செயல்படும். அரசாங்கக் கொள்கைகளை வகுப்பதிலும் மற்றும் அக்கொள்கைகளின் சிறப்பான செயற்பாட்டிற்காகவும் வழிவகை செய்யப்படும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் தங்களது கொள்கைகளை வடிவமைப்பதற்கு தேவைப்படும் அறிவுசார்ந்த மற்றும் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கும் நிறுவனமாகும்.
- புதிய கொள்கை முடிவுகளை செயலாக்கத்திற்கு கொண்டு வருவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார வர்த்தகத் திட்டங்கள் அமைப்பது இதன் செயல்பாடாகும்.
- உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ செயல்பட்டுக் கொண்டிருக்கும் சிறந்த ஆட்சி முறைகளை நாடு முழுவதும் செயல்படுத்துவது. குறிப்பிட்ட பிரச்சினை சார்ந்த விஷயங்களுக்கு தீர்வளிப்பது இவ்வமைப்பின் முக்கிய அம்சமாகும்.

## தேசிய வளர்ச்சி கவுன்சில்(NDC)

- திட்டக்குழு திட்ட வரைவை உண்டாக்குகிறது. அதை தேசிய வளர்ச்சி கவுன்சில் அங்கீகரிக்கிறது.
- தேசிய வளர்ச்சி கவுன்சில் 1952 ஆம் ஆண்ட ஆகஸ்டு 6 ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது.
- பிரதமர் தேசிய வளர்ச்சி கவுன்சிலின் அலுவல் சாரா தலைவராவார்.
- மத்திய கேபினட் அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், நிதியமைச்சர்கள், துணை நிலை ஆளுநர்கள், குடியரசு தலைவர் ஆட்சி நடக்கும் மாநிலங்களின் ஆளுநர்கள் ஆகியோர் தேசிய வளர்ச்சி கவுன்சிலின் உறுப்பினர்கள்.
- திட்டக்குழுவினைப் போலவே, தேசிய வளர்ச்சிக் குழுவானது அரசியலமைப்பு அந்தஸ்து பெறாத அமைப்பு, பாராளுமன்ற சட்டம் மூலம் கொண்டுவரப்பட்ட அமைப்பு.

## தேசிய வளர்ச்சிக் குழுவின் சிறப்பு தன்மைகள்

- ஐந்தாண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் பாராளுமன்றத்திற்கு அடுத்த நிலையில் தேசிய வளர்ச்சிக் குழு அதிகாரம் பெற்றுள்ளது.
- எனினும் இது, திட்டக்குழுவிற்கு அறிவுரைகளை மட்டுமே வழங்க இயலும்.
- மேலும் இதன் பரிந்துரைகள், திட்டக் குழுவின் முடிவுகளை கட்டுப்படுத்தாது.
- தேசிய வளர்ச்சிக் குழுவானது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கும் தனது பரிந்துரைகளை வழங்குகிறது.
- வருடத்திற்கு குறைந்தது இருமுறையேனும் தேசிய வளர்ச்சிக் குழு கூடுகிறது.

## நிதிக்குழு

- அரசியலமைப்பு விதி 280-ன் படி அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த இரண்டு ஆண்டுக்குள் நிதிக்குழு அமைக்கப்பட வேண்டும். அவ்வாறே தொடரும் நிதிக்குழுவானது ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும் ஒருமுறை குடியரசுத் தலைவரால் புதிதாக அமைக்கப்படும்.
- நிதிக்குழு ஓர் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- நிதிக்குழுவானது ஓர் அரசியலமைப்பு மற்றும் பகுதி நிதி அமைப்பாகும் (Quasi-Judicial Body).
- இக்குழு மத்திய, மாநில நிதி ஆதாரங்களை ஆராய்ந்து, தனது பரிந்துரைகளை வழங்கும்.
- **முதல் நிதிக்குழு தலைவர் - கே.சி. நியோகி**
- **14வது நிதிக்குழு தலைவர் - Y.V.ரெட்டி (2015-2020)**
- **15வது நிதிக்குழு தலைவர் - NK.சிங் (2020-2025)**

# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : வரி**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரி

## வரி என்பதன் பொருள்

வரிகள் மூலம் பெறப்படுகின்ற வருமானமே பொதுவருவாயின் முக்கிய வருமானமாகும். ஒரு குடிமகன் (அ) ஒரு நிறுவனம் அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்தக்கூடிய ஒரு செலுத்துகையே வரி எனப்படும். வரி விதிப்பில் கட்டாயத் தன்மை காணப்படுகிறது.

## வரி இலக்கணம்

பேராசிரியர் செலிக்மேன் (Seligman) " வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும், செலுத்துகை, அரசிடம் இருந்து எந்தவித நேரடி நன்மையையும் எதிர்பார்க்காமல், கட்டாயமாக செலுத்த வேண்டியதே வரி எனப்படும்" என கூறுகிறார்.

## வரிகளின் வகைகள்

வரிகளின் வகைகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். அவையாவன,

1. நேர்முக மற்றும் மறைமுக வரிகள்.
2. விகித வரிவிதிப்புமுறை, வளர்வீதமுறை, தேய்வு வீதமுறை, மிதவளர்மீத முறை.
3. சிறப்புத் தீர்வை மற்றும் மதிப்பு மீதான வரி
4. மதிப்புக் கூட்டு வரி (VAT)
5. ஒன்று (அ) பலதரப்பட்ட வரிகள்.

## நேர்முக மற்றும் மறைமுக வரிகள்

- பேராசிரியர் டால்டனின் கூற்றுப்படி, " நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்பட்டதோ, அவரே வரி செலுத்துவதாகும். மறைமுகவரி என்பது ஒருவர் மீது வரிவிதிக்கப்பட்டு, மற்றொருவர் பகுதியாகவோ (அ) முழுமையாகவோ வரி செலுத்துவதாகும்.
- நேர்முக வரியில் வரி செலுத்துபவரே, வரிச்சுமையைச் சுமக்க வேண்டும். ஆனால் மறைமுக வரியில், வரி விதிக்கப்பட்டவர் வேறு, வரிச்சுமையைச் சுமப்பவர் வேறு.
- **நேர்முக வரி எ.கா. வருமானவரி, சொத்துவரி, வெகுமதி வரி, தீர்வை வரி என்பவையாகும்.**
- **மறைமுக வரி எ.கா. சுங்க வரி, விற்பனை வரி என்பனவாகும்.**
- நேர்முக வரியானது மக்களிடமிருந்து நேரடியாக வசூலிக்கப்படுகிறது. இவ்வரியானது யார் மீது விதிக்கப்படுகிறதோ அவரிடமிருந்தோ வசூலிக்கப்படுகிறது. இவ்வகை வரியில் வரி ஏய்ப்பு என்பது கடினமாகும்.
- மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுவது ஆகும். இதில் விதிக்கப்படும் வரியின் துவக்கச் சுமை ஒருவர் மீது இருப்பினும் உண்மை வரிச் சுமையானது மற்றொருவர் மீது மாற்ற இயலும். நிகழ்வு மாற்றம் என்பது யார் வரியைச் செலுத்துகிறாரோ? உண்மையில் வரிச்சுமையை ஏற்பவர் யார் என்பதைக் குறிக்கிறது. நேர்முக வரியில் பணச்சுமையும், உண்மைச் சுமையும் ஒருவர் மீதே நிலை பெறுகிறது.

- ஆனால் மறைமுக வரியில் ஒரு மோட்டார் சைக்கிள் விற்பனையாளர் வரிச்சுமையை துவக்கத்தில் ஏற்பினும், பொருளை வாங்குபவரே வரிச் சுமையைப் பின் ஏற்கிறார்.

## மத்திய மற்றும் மாநில அரசுகளின் வரிகள்

இந்தியாவின் நிதியியல் அமைப்பானது, கூட்டாட்சி அமைப்பாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தியாவில் மத்திய, மாநில அரசுகளுக்குத் தனித்தனியாக வரிகள் விதித்து வசூலிக்கும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான பிரிவினைகளின் மூலம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிதி நிர்வாகத்தில் எந்தவித பிரச்சனைகளும் ஏற்படாது.

## மத்திய அரசு விதிக்கும் வரிகள்

மத்திய அரசுக்குக் கீழ்காணும் இருமுறைகளில் வருமானம் கிடைக்கிறது.

1. வரி சார்ந்த வருமானம்
2. வரி சாராத வருமானம்

## வரி சார்ந்த வருமானம்

1. வேளாண்மை வருமானம் தவிர்த்து பிற வருமானங்களின் மீதான வரிகள்
2. நிறுவனங்களின் மீதான வரிகள்
3. செலவினங்கள் மீதான வரிகள்
4. சொத்துக்கள் மீதான வரிகள்
5. அன்பளிப்பு வரிகள்
6. செல்வ வரிகள்
7. மூலதனத்தின் மீதான வரிகள்
8. ஆயத்தீர்வை வரிகள்
9. சுங்கத் தீர்வுகள் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரிகள்)

## வரி சாரா வருமானம்

1. நிதிசார் பணிகள்
2. வட்டி வருவாய்கள்
3. இலாப பங்குகள்
4. பொதுப் பயன், பணிகள்
5. சமூக, சமுதாயப் பயன் பணிகள்
6. பொருளாதார பயன் பணிகள்

## மாநில அரசால் விதிக்கப்படும் வரிகள்

இந்திய அரசியல் அமைப்பு சட்டப்படி மாநில அரசுகள் வரி விதிப்பின் மூலம் வருமானம் பெறும் அதிகாரம் பெற்றுள்ளன. ஆனால் யூனியன் பிரதேசங்களுக்கு நேரடியான நிதியுதவியை மத்திய அரசாங்கமே அளித்து உதவும்.

## மாநில அரசின் மூலம் விதிக்கப்படும் வரிகள்

1. நில வருவாய் (வரி, தீர்வை வசூலிப்பு உட்பட)
2. விற்பனை மற்றும் செய்தித்தாள் தவிர மற்ற பொருள்கள் மீதான வரிகள்
3. வேளாண்மை வருவாய் மற்றும் நிலம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள்
4. நிலம், மனைகள், கட்டிடங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்
5. வேளாண்மை நிலம் சார்பான, வேளாண் பண்ணை வரிகள்
6. மது வகைகள் மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வைகள்
7. ஒரு மாநிலத்திலிருந்து பிரிதொரு மாநிலத்திற்குப் பண்டங்களைக் கொண்டுவரும் போது விதிக்கப்படும் வரிகள்
8. கனிமப் பொருள்களின் உரிமங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்
9. மின்சார நுகர்வு, விற்பனை மீதான வரிகள்
10. விலங்குகள், படகுகள், வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரிகள்
11. இருப்புப் பாதை, உள்நாட்டு நீர்வழி ஆகியவற்றில் கொண்டு செல்லும் சரக்குகள், பயணிகளின் மீது விதிக்கப்படும் வரிகள்
12. முத்திரைத்தாள் வரிகள், நீதிமன்ற கட்டணம், மற்றும் பதிவுக் கட்டணங்கள்
13. பொழுதுபோக்கின் மீது விதிக்கப்படும் வரிகள்
14. விளம்பரங்கள், செய்தித்தாள் தவிர்த்து பிற விளம்பரங்கள் மீதான வரிகள்
15. தொழில்கள், வர்த்தகம், வேலைகள் மீதான வரிகள்
16. நீர்ப்பாசன மற்றும் காடுகள் மூலம் கிடைக்கும் வரி வருமானங்கள்
17. மத்திய அரசின் மானியங்கள் மீதான வரிகள்
18. பிற வருமானங்கள், அதாவது பதிவுக் கட்டணம், வருமான வரியில் ஒரு பகுதி, சுங்கவரிகள் மற்றும் கடன்கள் மீதான வரிகள்

## வரிவிதிப்பு முறைகள்

1. விகித முறை வரிகள்
2. வளர்வீத முறை வரிகள்
3. தேய்விகித முறை வரிகள்
4. மித வளர்மீத முறை வரிகள் என நான்கு வகைப்படுத்தப்படுகின்றன

## பாராளுமன்றத்தில் சரக்கு மற்றும் சேவை வரி முன்மொழிதல்

**2016 ஆம் ஆண்டு ஆகஸ்டு 3 ஆம் தேதி ராஜ்ய சபா சட்டம் மூலம் நிறைவேற்றப்பட்டது** மற்றும் திருத்தப்பட்ட மசோதா 2016 ஆகஸ்ட் 8 ஆம் தேதி மக்களவைக்கு வழங்கப்பட்டது. மசோதா மாநிலங்களின் ஒப்புதலுடன் குடியரசுத் தலைவர் செப்டம்பர் 8, 2016 அன்று ஒப்புதல் அளித்தார் மற்றும் 1 ஜுலை 2017 அன்று அமலபடுத்தப்பட்டது.

## சரக்கு மற்றும் சேவை வரி

சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) என்பது ஒரு மதிப்பு கூடுதல் வரி. ஒவ்வொரு பொருட்களின் மீதான சேவை வரி முறையின் குறைபாடுகளை அகற்ற ஜி.எஸ்.டி முற்படுகிறது, இதன் விளைவாக வரிக்கு வரி விதிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது.

## ஜி.எஸ்.டிக்குள் அடங்கும் வரிகள்

மத்திய சுங்கவரி, கூடுதல் சுங்கவரி, சேவை வரி, மத்திய செஸ் மற்றும் சர்சார்ஜஸ் வரி , மாநில அரசின் வரியான வாட் வரி போன்றவை. விற்பனை வரி, ஆடம்பர வரி, கேளிக்கை வரி, விளம்பரங்கள் மீதான வரி, பந்தயம் மற்றும் சூதாட்டம் ஆகியவற்றின் மீதான வரிகள், மாநில அரசின் செஸ் மற்றும் சர்சார்ஜஸ், அடிப்படை சுங்க வரி போன்றவை ஜி.எஸ்.டிக்குள் அடங்கும்.

## ஜி.எஸ்.டி-ன் சதவிகிதம்

- ஜிஎஸ்டி 5, 12, 18 மற்றும் 28 சதவிகிதம் என நான்கு அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- அத்தியாவசிய பொருட்களுக்கு குறைந்த விகிதம் வரியாக விதிக்கப்பட்டுள்ளது.
- சொகுசு மற்றும் டி-மெரிட் பொருட்களுக்கு அதிகபட்ச விகிதம் வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

## GST சட்ட திருத்தம்

சரத்து 246A, 269A, 279A சேர்த்தல் சரத்து 268A நீக்குதல் 248, 249, 250, 268, 269, 270, 271, 286, 366, 368, 6 அட்டவணை, 7 அட்டவணைகளின் சட்ட திருத்தங்கள்.

1. SGST - அரசு GST, மாநில அரசு மூலம் சேகரிக்கப்பட்டது
2. CGST - மத்திய GST, மத்திய அரசால் சேகரிக்கப்பட்டது
3. IGST - ஒருங்கிணைந்தத GST மத்திய அரசால் சேகரிக்கப்பட்டது
4. UTGST - யூனியன் பிரேதச GST, யூனியன் பிரேதச அரசாங்கத்தால் சேகரிக்கப்பட்டது.

# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி** : இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள்

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள்

- இந்தியா, இயற்கை வளங்களையும், மனித ஆற்றலையும் நிரம்பப் பெற்றிருந்தபோதிலும் அவைகளை முற்றிலுமாக உபயோகப்படுத்துவதில்லை.
- பிரிட்டிஷ் அரசினர், இந்தியாவை ஓர் சந்தையாக மாற்றி, இந்தியாவின் உள்ளூர் தொழிற்சாலைகளை அழித்து, மூலதனப் பொருட்களை, மேலை நாடுகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முயன்றனர்.
- தாதாபாய் நௌரோஜி 1876-ம் ஆண்டில், இந்தியாவின் சொத்தும் மூலதனமும் அழிவதன் காரணமாகத்தான், நம் நாட்டின் வளர்ச்சி குறைகிறது என்று கண்டுபிடித்தார்.
- இந்த விளக்கங்கள் தாதாபாய் நௌரோஜி எழுதிய "வறுமையும், பிரிட்டிஷ் ஆட்சி இல்லாத இந்தியாவும் " ( Poverty and Unbritish rule in India) என்ற நூலில் காணப்படுகின்றன.
- பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் ஆடம் ஸ்மித்.
- இந்தியப் பொருளாதாரம் ஒரு கலப்புப் பொருளாதாரம் ஆகும்.
- இந்தியப் பொருளாதாரம் வளரும் பொருளாதாரம் எனவும் கருதப்படுகிறது.
- இந்தியா ஒரு வளர்ந்து வரும் பொருளாதார நாடாகும். வாங்கும் திறன் அடிப்படையில் (Purchase Power Parity) இந்தியா உலகில் உள்ள ஐந்து பெரிய பொருளாதார நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.
- இந்தியப் பொருளாதாரத்திற்கு வேளாண்மை மற்றும் தொழில் துறையை விட சேவைத் துறையே அதிக வருமானம் ஈட்டித் தருகிறது.
- இந்தியாவில்அரசுத்துறையும்,தனியார்த்துறையும்உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் கலப்புப் பொருளாதார முறை உள்ளது.
- இந்தியப் பொருளாதாரத்தில் கிராமம்-நகரம், வறுமை-வளமை, வேளாண்மை-தொழில் போன்ற இரட்டைத் தன்மைகள் பலவும் காணப்படுவதால் இந்தியப் பொருளாதாரத்தை இரட்டைப் பொருளாதாரம் (Dualistic Economy) என்று அழைப்பர்.
- இந்தியப் பொருளாதாரத்தில் வறுமை, குறைந்த முதலீட்டாக்கம், மக்கள் தொகைப் பிரச்சனை போன்றவை காணப்படுகின்றன.
- வேலையின்மையும், குறைந்த உற்பத்தியும், போதுமான உள்கட்டமைப்பு வசதியின்மையும் இந்தியப் பொருளாதாரத்தில் இன்னும் காணப்படுகின்றன.
- இந்தியப் பொருளாதாரத்தில் தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல் ஆகிய நோக்கத்தோடு 1991-ம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

**<u>மக்கள் தொகையும் பொருளாதார வளர்ச்சியும்</u>**

- வேகமாக வளரும் மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி முறைகளைக் பெரிதும் தடுக்கிறது.
- இந்தியப் பொருளாதாரம், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பெரிதும் வளரக்கூடும்.
- ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலேயே (1980-1985), இந்திய அரசு, மக்கள் தொகையை 1000-க்கு 25 ஆகக் குறைக்க திட்டம் தீட்டியது.

- அரசாங்கத்தின் இத்திட்டம், பல்வேறு சமூக, மத மனோதத்துவ மற்றும் பொருளாதாரக் காரணங்களினால் சரியாக வெற்றி பெறவில்லை.

**பின்தங்கிய நாடுகளின் சிறப்பியல்புகள் (Characteristics of Under Developed Nations)**

தலா வருமானத்தின் அடிப்படையில் ஒரு நாடு வளர்ந்த நாடு என்றும், வளரும் நாடு என்றும் வகைப்படுத்தப்படுகின்றது. அதிக தலா வருமானம் கொண்ட ஐக்கிய நாடுகள், கனடா, மேற்கு ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் பணக்கார நாடுகளாகும். குறைந்த தலா வருமானம் கொண்ட ஆசியா, ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஐரோப்பா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகள் ஏழை நாடுகள். நடுத்தர வருமானம் ஈட்டும் அர்ஜென்டினா, தெற்கு ஆப்பிரிக்கா, இஸ்ரேல் மற்றும் முந்தைய சோவியத் ரஷ்யா போன்றவை நடுத்தர நாடுகள்.

- மேயர் (Meier) மற்றும் பால்டுவின் (Baldwin) அவர்களின் கருத்துப்படி வளர்ச்சி குன்றிய நாடுகளில் கீழ்காணும் 6 வகையான அடிப்படை பண்புகள் காணப்படுகின்றன.
    1. முதன்மைத் துறை உற்பத்தி
    2. மக்கள் தொகை அடர்த்தி / அழுத்தம்
    3. இயற்கை வளங்களை சரியாகப் பயன்படுத்தாமை.
    4. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் தொகை
    5. மூலதன திரட்சிக் குறைவு, அயல்நாட்டு வாணிபத்தைச் சார்ந்த நிலை.

**உற்பத்திக் காரணிகள்**

1. நிலம் - வாரம்
2. உழைப்பு - கூலி
3. மூலதனம் - வட்டி
4. அமைப்பு - லாபம் / நஷ்டம்

**பொருளாதார முறைகள்**

**1. பழமைப் பொருளாதாரம்**

இது வாழ்வுப் பொருளாதாரம் என்றும், பிழைப்புப் பொருளாதாரம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு பண்டமாற்று முறையில் பரிவர்த்தனை நடைபெறும். இது மூடப்பட்ட பொருளாதாரம் என்றும் அழைக்கப்படும்.

**2. முதலாளித்துவப் பொருளாதாரம்**

தொழில் நிறுவனங்கள் அனைத்தும் தனியார் முதலீட்டில் அமைந்திருக்கும்.(உ-ம்) அமெரிக்கா.

**3. பொதுவுடைமைப் பொருளாதாரம்**

இது கட்டளைப் பொருளாதாரம் என்று அழைக்கப்படுகிறது. நாட்டில் உள்ள பொருளாதார உற்பத்தி காரணிகள் அனைத்தும் அரசிற்கு சொந்தம். (உ-ம்) சோவியத் ரஷ்யா.

**4. கலப்புப் பொருளாதாரம்**

உற்பத்திக் காரணிகளை அரசும், தனியாரும் இணைந்து செயல்படுத்தும் (உ-ம்) இந்தியா, பிரான்சு.

## தமிழ்நாடு அரசு
## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய பொருளாதாரம்**

**பகுதி : ஊரக வளர்ச்சித் திட்டங்கள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# ஊரக வளர்ச்சித் திட்டங்கள்

| வ.எண் | பெயர் | ஆண்டு | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | சமூக முன்னேற்ற திட்டம் | 1953 | இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் முன்னேற்ற திட்டம். மக்கள் பங்கேற்புடன் கிராமத்தை முன்னேற்றம் அடையச் செய்தல். |
| 2. | இந்தியா சுற்றுலா கழகம் | 1966 | 12-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வறுமை கோட்டில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க சுற்றுலா துறையை ஒரு திட்டமாக அறிவித்தது |
| 3. | ஊரக மின்வசதி கழகம் | 1969 | ஊரக குடியிருப்புகளுக்கும், விவசாயத்திற்கும் மின் இணைப்பு வழங்குதல். |
| 4. | வீட்டு வசதி (ம) நகர்புற முன்னேற்ற கழகம் | 1970 | நகர்ப்புறங்களில் வீடு கட்ட நீண்ட கால கடன் வழங்குதல். |
| 5. | 20 அம்சத் திட்டம் | 1975 | (Slogen) ஹரிபி கட்டாவ்<br>ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டில் உள்ளவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்துதல். |
| 6. | வேலைக்கு உணவு திட்டம் | 1977-78 | ஊரகப் பகுதிகளில் அரசாங்கம் வழங்குகின்ற வேலைக்கு ஊதியமாக உணவு தானியம் வழங்குதல். |
| 7. | ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சித்திட்டம் (TRYSEM-TRAINING FOR RURAL YOUTH SELF EMPLOYMENT MISSION) | 1979 | வறுமைக்கோட்டில் வாழும் படித்த ஊரக இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பை உருவாக்குதல்.<br>இத்திட்டம் (IRDP)-ன் துணைத்திட்டம்.<br>இத்திட்டம் தற்போது ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுவேரோஸ்கர் யோஜனா திட்டத்துடன் இணைக்கப்பட்டது. |
| 8. | ஒருங்கிணைந்த ஊரக முன்னேற்றத் திட்டம் (IRDP- INTEGRATED RURAL DEVELOPMENT PROGRAMME) | 1980 | வணிக வங்கிகள் (ம) வட்டார கிராம வங்கிகள் மூலம் ஊரக இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடன் வழங்குதல். இத்திட்டம் தற்போது, ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுவேரோஸ்கர் யோஜனா திட்டத்துடன் இணைக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 9. | தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் (NREP- National Rural Employment PROGRAMME) | 1980 | ஊரக பகுதிகளில் வசிக்கும் விவசாய தொழிலாளர்களுக்கு இலாபகரமான முறையில் வேலைவாய்ப்பை வழங்குதல். |
| 10. | ஊரக பெண்கள் (ம) குழந்தைகள் முன்னேற்ற திட்டம். (DWCRA- Development of Women and Children in Rural Area.) | 1982 | வறுமைக்கோட்டில் வாழும் பெண்கள் முன்னேற்றத்திற்கான வேலைவாய்ப்பு திட்டம்.<br>இத்திட்டம் (IRDP)-ன் துணைத்திட்டம்.<br>இத்திட்டம் தற்போது ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுவேரோஸ்கர் யோஜனா திட்டத்துடன் இணைக்கப்பட்டது. |
| 11. | ஊரக நிலமற்றோருக்கான வேலை உறுதித் திட்டம் (RLEGP- Rural landless Employment Guarantee Programme) | 1983 | ஊரக பகுதிகளில் உள்ள விவசாய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல். உணவு தானியமும், ரொக்கமும் ஊதியமாக வழங்கப்பட்டது. |
| 12. | இந்திரா அவாஸ் யோஜனா (IAY) | 1985 | வறுமை கோட்டில் வாழும் ஊரக மக்களுக்கு புதிய வீடு கட்டவும், பழைய வீட்டை புதுப்பிக்கவும், நிதியுதவி வழங்குதல். |
| 13. | மில்லியன் கிணறு திட்டம் | 1988 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், கொத்தடிமைகள், சிறு, குறு, விவசாயிகளுக்கு, இலவச திறந்த வெளி கிணறு அமைத்து தருதல். |
| 14. | பிரதம மந்திர் ரோஸ்கர் யோஜனா | 1993 | இத்திட்டம் 8-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 7-இலட்சம் சிறு, குறு தொழில்களை உருவாக்கி 10- இலட்சம் வேலைவாய்ப்பை வழங்க கொண்டு வரப்பட்டது. படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க கடன் வழங்குதல். |
| 15. | ஜவஹர் ரோஸ்கர் யோஜனா(JRY) | 1989 | ஊரக பகுதிகளில் வேலைவாய்ப்பை வழங்குதல். |
| 16. | நேரு ரோஸ்கர் யோஜனா | 1989 | நகர்ப்புறங்களில் நுண் நிறுவனங்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்பு வழங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| 17. | வேலை உறுதி திட்டம் | 1993 | 18-60 வயது வரை உள்ள கிராமப்புற மக்களுக்கு ஆண்டிற்கு 100 நாட்கள் வேலைவாய்பை வழங்குதல். |
| 18. | ராஷ்டிரிய மகிளா கோஷ் திட்டம் | 1993 | வறுமை கோட்டில் உள்ள பெண்களுக்கு பெண்கள் முன்னேற்றத்திற்காக கடன் வழங்கும் திட்டம். |
| 19. | மகிளா சம்ரிதி யோஜனா | 1993 | ஊரக பெண்களிடம் சேமிப்பை ஊக்கப்படுத்தி பொருளாதார பாதுகாப்பு வழங்குதல் |
| 20. | இந்திரா மகிளா யோஜனா | 1995 | ஊரக (ம) நகர்ப்புறங்களில் பெண்கள் சுய உதவி குழுக்களை ஏற்படுத்தி வருமானத்தை பெருக்குதல், பெண்களுக்கான வருமான வளங்களை ஏற்படுத்துதல். |
| 21. | குழந்தை தொழிலாளர் ஒழிப்பு திட்டம் | 1994 | ஆபத்தான தொழில்களில் ஈடுபடும் குழந்தை தொழிலாளர்களை மீட்டு பள்ளியில் சேர்த்தல். |
| 22. | கங்கா கல்யாண் திட்டம் | 1997 | நீர் ஆதாரங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்குதல். |
| 23. | ஸ்வர்ண ஜெயந்தி சர்காரி ரோஸ்கர் யோஜனா | 1997 | நகரங்களில் உள்ள ஏழைகளுக்கு திறன் பயிற்சி அளித்து நுண் நிறுவனங்களை ஏற்படுத்துதல். |
| 24. | பிரதம மந்திரி கிராமோதயா திட்டம் | 2000 | ஊரக பகுதிகளில் அடிப்படை வசதியை ஏற்படுத்துதல். |
| 25. | அந்தியோதயா அன்ன யோஜனா | 2000 | வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்கு மலிவு விலையில் உணவு தானியங்களை வழங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| 26. | பிரதம மந்திரி கிராம சடக் யோஜனா | 2000 | அனைத்து கிராமங்களுக்கும், அனைத்துப் பருவகாலங்களில் பயன்படக்கூடிய சாலை வசதி ஏற்படுத்தித் தருதல். |
| 27. | தேசிய வேலைக்கு உணவுத் திட்டம் | 2004 | திட்டக்குழு அடையாளம் கண்ட 150 பின்தங்கிய மாவட்டங்களில் துணை கூலித் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. |
| 28. | பாரத் நிர்மான திட்டம் | 2005 | ஊரக பகுதிகளில் உள்கட்டமைப்பை ஏற்படுத்த 6 பிரிவுக்கு முக்கியத்துவம் அளித்தனர். 1. நீர்ப்பாசன வசதி அதிகரித்தல். 2. குடிநீர் வழங்குதல். 3. வீட்டு வசதியை அளித்தல். 4. சாலை வசதி. 5. தொலைத் தொடர்பு வசதி. 6. மின்சார வசதி. |
| 29. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம். (MGNREGS) | 2006 | வறுமைக் கோட்டில் உள்ள குடும்பங்களுக்கு ஆண்டிற்கு 100 நாள் வேலை வழங்குதல். உலக அளவில் வேலை உத்திரவாதத்திற்கென கொண்டுவரப்பட்ட முதல் சட்டம். |
| 30. | தேசிய சமூக உதவி திட்டம் | 1995 | மூத்த குடிமக்களுக்கும், விதவைகளுக்கும் உடல் ஊனமுற்றோர்க்கும் ஓய்வூதியம் வழங்குதல். |
| 31. | AYUSH | 2010 | A- Ayurvetham<br>Y – YOGA<br>U- Unani<br>S- Siddha<br>H- Homeopathy. |
| 32. | PURA திட்டம் (Providing Urban Aminities to Rural Area.) | 2003 | நகர்ப்புறஅடிப்படை வசதிகளை ஊரகப்பகுதிகளுக்குகொண்டு செல்லுதல். A.P.J அப்துல் கலாம் கனவு திட்டம் |
| 33. | பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா | 2015 | வங்கி கணக்கு வைத்திருப்போருக்கு விபத்து (ம) உடல் ஊனத்திற்கான காப்பீட்டு திட்டம். வயது வரம்பு - 18-70 வயது வரை. வருட பிரிமியம்-12 ரூபாய். |

| | | | |
|---|---|---|---|
| 34. | ஸ்வச்சா பாரக் மிஷன் | 2014 | 2019-ம் ஆண்டிற்குள் கழிவுகளை அகற்றி தூய்மையான இந்தியாவை உருவாக்குதல். |
| 35. | UDAY திட்டம் (Ujjwal Discom Assurance Yojana | 2015 | மின் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் நிதி நெருக்கடியை குறைத்தல், மின் பகிர்மானத்தை முறைப்படுத்துதல், மின் கழகங்களை மேம்படுத்துதல். இத்திட்டத்தில் சேர்ந்த முதல் மாநிலம் JHARKAND |
| 36. | பிரதம மந்திரி அவாஸ் கிராம யோஜனா | 2016 | வறுமை கோட்டில் உள்ள பின்தங்கிய ஊரக மக்களுக்கு வீடுகட்ட நிதியுதவி வழங்குதல். |
| 37. | Housing for All | 2015 | பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு வீடுகட்ட நிதியுதவி வழங்குதல். |
| 38. | பிரதம மந்திரி யுவ யோஜனா | 2016 | அடுத்த 5 ஆண்டுகளில் 7,00,000 மாணவர்களுக்கு தொழிற்கல்வி (ம) பயிற்சி அளித்தல். |
| 39. | நமாமி கங்கா திட்டம் | 2015 | கங்கை நதியை தூய்மைப்படுத்துதல். |
| 40. | Smart Ganga City Plan | 2016 | கங்கை நதிக்கரையில் உள்ள நகரங்களில் உள்கட்டமைப்பு ஏற்படுத்துதல், கழிவுநீர் கங்கையில் கலக்காமல் தடுத்தல். |
| 41. | பிரதம மந்திர சுரக்ஷிக் மாந்திரியால் அபியான் | 2016 | ஊரக பகுதிகளில் உள்ள ஏழை கர்ப்பிணி பெண்களுக்கான திட்டம். |
| 42. | கரீப் கல்யாண் யோஜனா | 2016 | கருப்பு பணம் பதுக்கியவர்களிடம் இருந்து பிடிக்கப்பட்ட தொகையை வறுமைக்கோட்டில் உள்ள மக்களுக்கு செலவிடுதல். |
| 43. | HRI DAY திட்டம் | 2014 | புராதான நகரங்களை தேர்ந்தெடுத்து பழங்கால சின்னங்களை பாதுகாத்தல். |
| 44. | Mera Gam Mera Gaurav | 2015 | விவசாய முன்னேற்றத்திற்கான திட்டம். வேளாண் விஞ்ஞானிகள் மூலம் வேளாண்மை உற்பத்தியை பெருக்குதல். |
| 45. | இந்திரா தனுஷ் கழகம் | 2016 | 5-வயதிற்குட்பட்ட குழுந்தைகளுக்கு 7-விதமான நோய்களுக்கு தடுப்பூசி, தடுப்பு மருந்து கொடுத்தல். |